


# சிதறிய துளிகளை ஒன்றாக்கி...

சிறீலங்காவின் வடகிழக்கில் நடாத்தப்படும் வான் தாக்குதல்கள் தொடர்பான ஒரு ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிய துளிகளை
ஒன்றாக்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதறிய துளிகளை ஒன்றாக்கி...

சிறீலங்காவின் வடகிழக்கில் நடாத்தப்படும் வான் தாக்குதல்கள்
தொடர்பான ஒரு கண்ணோட்டம்

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம்
*SEDOT*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நாளைப் பற்றி, அதைப் பற்றிக் கதைப்பது எனக்கு மிகவும் கடினம். ஆனால் இவை ஐக்கிய நாடுகளவையைச் சென்றடையும் என்னும் நம்பிக்கையில் நான் இவற்றைக் கூறுகின்றேன். எங்களின் அடுத்த
தலைமுறையும் எங்களைப் போல் ஆகிவிட முதல் ஏதாவது செய்யப்பட வேண்டும்.

தயவு செய்து ஏதாவது செய்யுங்கள். இந்த உலகம் எங்களில் இரக்கம் காட்டும் என நம்புகின்றோம். அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்று நம்புகின்றோம்.

-நிதர்சினி விஜயசிங்கம்

செஞ்சோலை வான் தாக்குதலில் தாக்கப்பட்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிராசா தீபா

பாலகிருஷ்ணன் மதனா

...கலிங்கம் கோகிலா

கனகலிங்கம் நிருபா

கனகலிங்கம் நிருஜா

குமாரசிங்கம் நிஷானி

சிவபாலசிங்கம் கோகிலா

சந்திரனம் சந்தியகலா

...பிரமணியம் லக்சனாதேவி

சாந்தகுமார் கவிதா

கனகரத்தினம் கவிதர்ஷினி

...லிங்கம் சாந்தகுமாரி

கணபதிப்பிள்ளை நந்தினி

...ா சர்மிளி

ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி 2006ம் ஆண்டு உதிர்ந்த பூக்களுக்கும் ஒவ்வொரு நாளும் இந்த வான் தாக்குதலின் நினைவுகளின் எச்சங்களைச் சுமந்து நடைபிணமாய் வாழும் அனைத்து உள்ளங்களுக்கும் இந்தப் புத்தகம் சமர்ப்பணம்.

முருகையா ...செல்வி

செல்வம் தமிழ்ச்செல்வி

தம்பிராசா திலக்சியா

தம்பிராசா கஜந்தினி

அந்தோனிமுத்து ஜெனகரன் சிந்தாசா

சிவானந்தராசா நிஷ்மியா

ஸ்ரீகேதாரநாதன் தட்சாயினி

...சாயி

புவனேசராசா புவனேஸ்வரி

தம்பிமுத்து தயாளினி

நடராஜசிங்கம் நிசாந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ராசேந்திரன் சுபோனா

மனோகரமூர்த்தி கிருஷ்ணிகா

நாகலிங்கம் நீபா

...பிள்ளை நிந்துஜா

திருநாவுக்கரசு நிரஞ்சனா

தர்மபாலா பிரு...

மகாலிங்கம் வசந்தராணி

குலேந்திரசெல்வம் விஜிதா

அருணா பங்கஜவல்லி

தவபாலலிங்கம் பவித்ரா

முத்தையா ஸ்ரீ

தமிழ்ச்செல்வன் நிவேதிகா

மகாலிங்கம் வெள்ளியம்மா

...விநாயகம் ரஞ்சனா

குமாரசிங்கம் சுதர்சினி

பத்மநாதன் கலைப்பிரியா

உதயகுமார் கௌசிகா

சந்திரசேகரம் விஜயகுமாரி

சத்தியம் அகிலா...

சிவமூர்த்தி கார்த்திகாயினி

சந்திரமோகன் நிவேதிகா

நிமலேசன் நிஷாந்தினி

சிவலிங்கம் ரஞ்சிதா

விஜயபாலன் சிந்துஜா

தர்மகுலசிங்கம் சேயோன்

இராசேந்திரம் மகிழ்வதனி

மாணிக்கப்பிள்ளை கௌசல்யாயினி

சந்திரகாசி

விஜிதரன் டயானி

இரவீந்திரநாதன் நம்பிக்கை

அருணம்பலம் மகேசுதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


அறிமுகம் — XIIII

## பாகம் *I*
## வான் தாக்குதல்கள்

*1.* வான் தாக்குதல்கள் — *03-04*

*2.* சம்பவம் — *05-06*

*3.* அவர்களின் சிந்தனையிலிருந்து

அ. மேகலா — *07-10*

ஆ. மதியரசி — *11-12*

இ. நிதர்சினி — *13-14*

ஈ. நிசாந்தினி — *15-16*

உ. ரூபவதனி — *17-18*

## பாகம் *II*
## உடல் ரீதியான தாக்கங்கள்

*4.* உடற் பாதிப்பு — *21-24*

*5.* என்றுமே பழைய மாதிரி இல்லை — *25-26*

*6.* மருத்துவச் சேவை—ஒரு பார்வை — *27-28*

## பாகம் III
## உளவியல் தாக்கங்கள்

*7.* பின்னணி — *31*

*8.* அனுபவம் — *32*

*9.* பின்னதிர்வு — *33-34*

*10.* முடிவுரை — *35-36*

*11.* அருட்தந்தை றெஜினால்ட் — *37-40*


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாகம் IV
## சூழலில் ஏற்படும் தாக்கங்கள்

*12.* இயற்கையின் வீழ்ச்சி *43-46*

## பாகம் V
## கல்வியில் ஏற்படும் தாக்கங்கள்

*13.* கேள்விக்குறியான எதிர்காலம் *49-52*

*14.* கிபீர் வரும்போது *54*

*15.* அதிபரின் பார்வை *55-56*

## பாகம் VI
## பொருளாதாரத்தில் தாக்கம்

*16.* பொருளாதாரத் தாக்கம் *59-60*

*17.* கிழக்கில் என்ன நடத்தின்றது *61*

*18.* மகேஸ்வரி கந்தையா *62*

*19.* பயத்தில் வாழ்தல் *63-64*

முடிவுரை *65*

வருமுன் காப்பதே மேலானது! *66*

பின் இணைப்புகள்:

*I.* வான் தாக்குதல் அட்டவணை

*II.* சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை – வான் தாக்குதல் தொடர்பான அறிக்கை

*III.* செஞ்சோலை குண்டு வெடிப்புச் சம்பவம்

*IV.* துன்பியல் நிகழ்வுகளின் பின்னரான மன அழுத்த நோயைத் தீர்மானித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நாங்கள் உயிர் வாழும்வரை இவர்களின் முகங்களை நாங்கள் மறந்து விடக்கூடாது. நடைபிணங்களான, இந்த விபரீதத்தில் தப்பி உயிர்வாழ்பவர்களின் பயம் நிறைந்த முகங்கள் உண்மையில் எங்கள் மனங்களை நெகிழ வைக்கும். அவர்களின் துன்பம் நிறைந்த கதைகளைக் கேட்கும் போதெல்லாம் அவை எங்களின் இதயங்களைப் பாரமாக்கும். இந்த நினைவுகளை மீள நினைப்பது எவ்வளவு வேதனையானதாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது தங்கள் நினைவுகளைத் தந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகளைக் கூற விரும்புகின்றோம். அவர்களின் எண்ணங்களையும் கதைகளையும் உள்ளதை உள்ளபடியே உங்களுக்கு வழங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1



# வான் தாக்குதல்கள்



வடகிழக்கின் வீதிகளில் நீங்கள் ஒரு முறை உலா வரும்போது வான் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட வீடுகளைக் காண்பது கடினமல்ல. பயமூட்டும் கிபீர் மற்றும் மிக் தாக்குதல் விமானங் களினால் தாயகத்தின் வடகிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ச்சியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வ்நதுள்ளனர். இது யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட் டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மிகவும் வெளிப்படையாகத் தெரியும் ஒரு கூற்று. குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வள்ளவிபுனம், கைவேலி, வேணாவில், விசுவமடு, ஆகிய பிரதேசங்களலும், திருகோணமலை மாவட் டதின் மூதூரிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரையிலும் வாழும் ஒவ்வொரு குடும்பமும் இந்தக் கொரூரத்தின் உச்சத்தை அனுப வித்துள்ளனர்.

காயங்கள், இழப்புக்கள் போன்ற வெளிப்ப டையான சேதங்கள் ஒரு பக்கமிருக்க ஒரு வான் தாக்குதலின் உண்மையான தாக்கத்தை பலர் உணர மறுக்கின்றனர். எண்ணற்ற தாக்கத்தை உண்டாக்கும் இந்த வான் தாக்குதல்களினால் எந்த வித வேறுபாடுமின்றி அனைவரும் பாதிப்புக்கு ஆளாகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான் தாக்குதல்கள் – ஒரு அறிமுகம்

ஒருவர் எவ்வளவு தயாராகவும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்கின்றார் என்றாலும் வான் தாக்குதல்களுக்கு எதிராக எந்தவித முழுமையான பாதுகாப்பையும் பெற்றுக் கொள்ள இயலாது. குண்டு துளைக்காத வீடோ அல்லது அங்கியோ இன்னமும் உருவாக்கப்படவில்லை என்பது ஒரு துன்பமான விடயமே. ஒரு குண்டு மக்களின் வாழ்க்கையையும் வழமையான செயற்பாடுகளை யும் அழித்து விடுகின்றது.



# வான்

ஒரு குண்டு அது வீசப்படும் இடத்தின் மூன்று கிலோமீட்டர் பிரதேசத்தை சேதப்படுத்தினாலும், அந்த நகரம், பிரதேசம், மற்றும் நாட்டையும், ஏன் இந்த உலகத்திலேயே உள்ள அனைவரையும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றது. எங்கு நீங்கள் ஓடினாலும், மறைவதற்கு எந்த ஒரு இடமும் இல்லை. இதுதான் தமிழர் வாழ்வின் அவலம். சுனாமி, போர், இடப்பெயர்வு, படுகொலை என அவலங்களின் தொடர்கதையாக தமிழீழ மக்களின் வாழ்வு.



செஞ்சோலை சிறார் இல்லை வான் தாக்குதல்



கிளிநொச்சி
வைத்தியசாலை
வான் தாக்குத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் தளர்வடையா முயற்சி, மன வலு, நாளைய நாளில் உள்ள நம்பிக்கையே, அவர்களை இந்தத் தடைகளைத் தாண்டிக் கொண்டு செல்கின்றன. இலங்கையின் இனப்போரின் வரலாற்றில் வான் தாக்குதல்கள் புதியவை அல்ல. பல வருட காலப் போரில், இந்தத் தாக்குதல்கள் மக்களின் வாழ்க்கைத் தரம், சுகாதாரமான வாழ்க்கைமுறை, மனநிலை மற்றும் குடும்பங்களில் பாரிய பாதிப்புக்களை உண்டாக்கியுள்ளன வான் வன்முறையின் சேதம் பாரியதும் அளவிட இயலாததுமாகும்.



# தாக்குதல்கள்

இந்த ஆய்வில் கண்டறிந்தது போல், கிபீர் மற்றும் மிக் தாக்குதல்கள் மக்களின் உடல்வலு, உளவலு, சூழல், கல்வி, பொருளாதாரம், இறுதியில் சமூக நலன் ஆகியவற்றை உள்ளடக்கிய பலவற்றில், தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மொத்தத்தில் தமிழ் மக்களின் வாழ்வில் ஏதோ ஒரு வகையில் இவை பாதிப்பை ஏற்படுத்திய வண்ணமே உள்ளன.



வாகரை வான் தாக்குதல்




இலுப்பைகடவை வான் தாக்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பவம்

ஆகஸ்ட் 14ம் திகதி 2006ம் ஆண்டு காலை நான்கு கிபிர் தாக்குதல் விமானங்கள் வடகிழக்கு இலங்கையில் உள்ள வள்ளிபுனம் என்னும் கிராமத்தின் வானங்களைச் சுற்றி வந்து செஞ்சோலை சிறார் இல்ல வளாகத்தில் பதினாறு குண்டுகளைப் போட்டன. முப்பது ஆண்டு இனப்போரின் பின்னர், ஏ9 பிரதான வீதி திறக்கப்பட தமிழர்களின் வாழ்வு சற்று வழமை நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. இடப்பெயர்வு, படுகொலைகள், பட்டினி, மற்றும் ஒரு இனப்போரின் வழமையான தடைகள், ஆகியவற்றைத் தாண்டி தங்கள் பிள் ளைகளின் பண்பாடு, பாரம்பரியம், விழுமியங்கள் மற்றும் கல்வியைத் தொடர்ந்து வளர்த்து வந்தார்கள். தமிழரின் வாழ்வில் சுய வளர்ச்சி, நிலையான தன்மை மற் றும் உயிர்வாழ்தல் ஆகியனவற்றில் கல்வி என்பது மிக முக்கிய பங்கு வகிக்கின் றது. இந்தக் காரணத்துக்காகவே தங்களுடைய பதினாறிலிருந்து பத்தொன்பது வயது பெண் பிள்ளைகளை முல்லைத்தீவின் செஞ்சோலை வளாகத்தில் இருந்த தலைமைத்துவ மற்றும் முதலுதவி பட்டறைகளுக்கு பெற்றோர்கள் அனுப்பி வைத்தார்கள். தொடர்ச்சியாகப் போர்ச் சூழலினாலும் இயற்கையானதும், செயற்கையானதுமான துனபகர நிகழ்வுகளினாலும் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு தலைமைத்துவ மற்றும் முதலுதவிப் பட்டறைகள் என்பது இன்றியமையாதவையாக இருந்தன.

ஆகஸ்ட் 14ம் திகதி போடப்பட்ட பதினாறு குண்டுகள் 55 உயிர்களைப் பலி கொண்டதோடு மொத்தமாக 129 மாணவிகளைக் காயப்படுத்தியது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறந்த 55 பேரில் 52 அப்பாவி இளம் பள்ளி செல்லும் பெண்கள் அடங்குவர். சிறீலங்கா அரசு இதை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பயிற்சித் தளத்தின் மேலான ஒரு தாக்குதலாகக் கூறி நியாயப்படுத்த முனைந்தாலும், அதில் தப்பியவர்கள், சிறீலங்கா கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தை நலன்பேண் நிதியம் ஆகியவற்றின் கூற்றுப்படி இது ஒரு தலைமைத்துவ மற்றும் முதலுத விப் பட்டறை என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. இத் தாக்குதல் உளநல ரீதியாக மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியதோடு சிறீலங்கா அமைதி ஒப்பந்தத்தி னதும் அமைதிப் பேச்சுவார்த்தையினதும் ஐந்து வருட வரலாற்றில் மிகவும் துயர் மிகுந்த நிகழ்வாகவும் உள்ளது. வாகரைப் பிரதேசத்தின் மீது மேற்கொள்ளப் பட்ட வான் தாக்குதல்கள் செஞ்சோலைச் சம்பவத்தை விட அதிகளவு உயிர் களைப் பலி கொண்டாலும், தமிழர்களின் மனதில் ஒரு ஆழமா ஒரு வடுவை செஞ்சோலை உருவாக்கிவிட்டது. எவரும் உந்த சந்தர்ப்பத்திலும், எதிர்பார்த் திருக்காத இலக்குகள்ஹ அப்பாவி இளம் பெண்கள், தங்களுடைய சாதாரண, உயர்தர வகுப்புத் தேர்வுகளை எதிர் பார்த்தபடி, இந்த உலகில் தங்கள் சிறகுகளை விரித்து கோபுரங்களை எட்டிப் பிடிக்க ஆவலாய் இருந்த மாணவி கள். இந்தச் சம்பவம் நடைபெற்ற ஒரு வருடம் பூர்த்தியாகினாலும், அன்றைய நாளின் வடுக்கள் இன்றும் தமிழர் நெஞ்சில் ஆறாதவை. வழமை நிலை என்பது அவர்களுக்கு இன்னமும் வெகுதூரக் கனவாகவே உள்ளது.

*"முதலுதவிப் பயிற்சிப் பட்டறைக்காக சுற்றி வர இருந்த பள்ளிக்கூடங்களில் இருந்து அங்கு கொண்டு வரப்பட்ட சிறுமிகள் இவர்கள்."*

*- ஜோகான்னா வான் கேர்ப்பென்*
*தலைவர், ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நலன்பேண் நிதியம், கொழும்பு*

*"எந்த வித இராணுவத் தளபாடங்களையோ ஆயுதங்களையோ நாங்கள் அங்கு காணவில்லை. இது ஒரு இராணுவத் தளம் இல்லை என்பதை நாங்கள் காணக் கூடியதாக இருந்தது."*

*- உல்ப் ஹென்றிக்சன்*
*சிறீலங்கா கண்காணிப்புக் குழுத் தலைவர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களின் சிந்தனையிலிருந்து...

**மேகலா ரட்ணசிங்கம், 19**

அன்று கிபீர் விமானங்கள் எங்களின் மேல் வட்டமிடும்போது நாங்கள் உயிர்வாழமாட்டோம் என்றே நான் நினைத்தேன். இல்லை, இது எங்களுக்காக இல்லை என்றே நாங்கள் அனைவரும் நினைத்தோம். வந்து எங்களின் தலைகளில் குண்டுகளை வீசும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் அந்தளவு இதை எதிர்பார்த்திருக்காததால், இதற்குத் தயாராகவும் இருக்கவில்லை.


நாங்கள் காலையில் எழுந்து காலைக் கடன்களைச் செய்து கொண்டிருந்தோம். பல் தீட்டுவது, முகத்தைக் கழுவுவது, தலையைப் பின்னுவது, போன்றதைச் செய்து கொண்டு மிகவும் உற்சாகமாகவும் அன்றைய நாள் செயற்பாடுகளைத் தொடங்க ஆவலாகவும் இருந்தோம். ஆனால் அன்று எங்களுக் காய்க்காத்திருந்தது நாங்கள் எதிர்பார்த்திருந்ததில்லை.



எங்கள் காயங்கள் இன்னும் சில வருடங்களில் மாறிவிட்டாலும், எங்கள் மனதில் ஏற்பட்ட ஆழ்ந்த வடுக்கள் எப்பொழுதும் மாறாது. எங்களின் முன்னால் அவர்கள் இறப்பதைக் கண்டோம், எதுவும் செய்ய இயலாத நிலையில் அவர்கள் எங்களின் முன்னால் இறப்பதைப் பார்த்த படி இருந்தோம். எங்களின் உயிரே எங்களின் கையில் இல்லாதபோது, மற்றவர்களின் உயிரை நாங்கள் எப்படிப் பாதுகாப்பது?

நான் ஊர்ந்து சென்று பாதுகாப்பைத் தேடிச் செல்லும்போது, வரிசையாக இருந்த இறந்த உடல்களைக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதனால் நாங்கள் மட்டும் பாதிக்கப்படவில்லை. எங்கள் பெற்றோர் எங்கள் நண்பர்கள் அனைவரும் பாதிக் கப்பட்டுள்ளார்கள். தங்களுக்கு என்ன நடக்கும், எங்களுக்கு என்ன நடக்கும் என்னும் தொடர்ச்சியான பயத்தில் அவர் கள் தற்போது உள்ளார்கள். ஆனால் செய் வதற்கு எதுவும் இல்லை.

நாங்கள் மற்றவர்களில் முழுமை யாகத் தங்கி இருப்பவர்களாக வந்த விட் டோம். சிறு விடயங்களுக்குக்கூட நாங் கள் மற்றவர்களில் தங்கி வாழ்கின்றோம். நான் என்னுடைய பெற்றோரின் உதவியு டன்தான் பள்ளிக்கு வருகின்றேன். அவர் களின் ஆதரவு இல்லாவிட்டால், அன் றைய நாள் நிகழ்வை எண்ணியபடி வீட்டில் இருந்து கவலைப்பட்டுக் கொண்டு இருப்பேன். பத்தொன்பது வயதாகியும் இன்னமும் என்னுடைய குடும் பத்தினரும், பெற்றோரும் எனக்குத் தலை இழுத்துவிடுவதற்கும், குளிப்பதற் கும், உந்துருளியை ஓட்டுவதற் கும் உதவி செய்ய வேண்டி உள்ளது.

இது நடக்கும் எங்களுக்கு, இப்பொழுது நடக்கும் என நாங்கள் நினைக்கவே இல்லை. 2007 இல் நான் உயர்தரத் தேர்வு எடுத்திருக்க வேண் டும். ஆனால் இப்பொழுது நான் ஒரு வருடம் பிந்தி விட்டேன். எனவே நான் 2008 ஆம் ஆண்டு எனது பரீட்சையை எடுப் பேன். என்னுடைய சிகிச்சையினா லும் இதிலிருந்த மீள வேண்டியதனாலும், பல வகுப்புக்களை நான் தவறவிட்டு விட்டேன். ஒரு வருடத்துக்குப் பின்னரும், உள் அல்லது வெளிக் காயங்களி னால் இன்னமும் பள்ளிக்கு வர இயலாமல் பலர் உள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களின் சிந்தனையிலிருந்து...

'எங்களின் அடுத்த தலைமுறையும் எங்களைப் போல ஆகிவிட முதல் ஏதாவது செய்யப்பட வேண்டும்.

தயவு செய்து ஏதாவது செய்யுங்கள். இந்த உலகம் எங்களில் இரக்கம் காட்டும் என நம்புகின்றோம்.

அவர்கள் ஏதாவது செய்வார்கள் என்று நம்புகின்றோம். உங்களின் உதவிக் கரங்களை எங்களை நோக்கி நீட்டுங்கள்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களின் சிந்தனையிலிருந்து...

**மதியரசி அப்பாத்துரை, 19**

அந்த நிகழ்வில் இருந்து நான் மீண்டும் மீண்டும் என்னிடம் ஒரே ஒரு கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். நாங்கள் ஏன் உயிர்வாழ்கின்றோம்? நாங்கள் அன்றே இறந்திருக்க வேண்டும். இப்பொழுது ஒவ்வொரு நாளும் இறந்து கொண்டிருக்கின்றோம். உண்மையில் அன்றைய நாள் இறந்தவர்கள் அதிஸ்டமானவர்கள். இந்த உண்மையினாலும் பயங்கரத்தினாலும் சித்திரவதைப் பட்டு ஒவ்வொரு நாளும் கஸ்டப்பட வேண்டிய தேவையில்லை.



1996ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள சாவகச்சேரி என்னும் இடத்தில் இருந்து நாங்கள் இடம்பெயர்ந்தோம். குண்டுகள் பற்றித் தெரிந்திருந்தாலும், அதன் தாக்கம் பற்றிப் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. ஒரு குண்டுத் தாக்குதல், ஒரு நிமிடம்தான் எடுக்கும் என்றாலும், தொடர்ச்சியாகப் பல வருடங்களுக்க அதன் தாக்கம் இருக்கும் என்பது எனக்குத் தெரிந்திருக்க வில்லை. அங்கிருந்த பெண்களில் ஒருவர் சேதத்தைக் குறைப்பதற்காக என்னை ஒரு மரத்தின் கீழ் படுக்குமாறு கூறினார். அவர் கூறியபடியே நான் செய்தேன். நான் இன்று காயமில்லாமல் இருப் பதற்குக் காரணம் அவர்தான். ஆனால் அவர் இறந்துவிட்டார். ஆவரின் அறிவுரையை பின்தொடர்ந்த நானோ தப்பிக்கொண்டேன். ஆனால் அவர் இறந்துவிட்டார்.



அந்த தலைமைத்துவ மற்றும் முதலுதவிப் பட்ட றையின் முதல் நான்கு நாட்களும் என்னுடைய வாழ்க் கையில் மிகவும் சந்தோசமான நாட்கள். எங்களுடைய நண்பர்களுடன் சிரித்துக் கதைத்தபடி, புதியவர்களைச் சந்தித்து அவர்களு டன் நட்பு ஏற்படுத்தி, அதுதான் அந்த இல்லத்தில் எங்கள் முதல் நான்கு நாள் வாழ்க்கையாக இருந்தது. அது உண்மை யில் ஒரு நல்ல சந்தோசமான அனுபவமாகத்தான் இருந்தது.

ஆனால் அதற்குப் பின்னர் வந்தது எங்கள் சந்தோசங்களையெல்லாம் ஒரேயடியாக அழித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிபீர்களும் வேவு விமானங்களும்
எங்கள் நாளாந்த வாழ்க்கையை
மிகவும் வேதனையாக்குகின்றன.

இதைப் போன்ற இன்னொரு
பயங்கரத்தை என்னால்
தாங்க இயலாது. ஒவ்வொரு முறை
கிபீர் வரும்போதும் எனக்கு அன்றைய
நாள் நினைவூட்டப்படும்.

கடைசி இப்பொழுதிலிருந்தாவது,
படிப்பதற்கும் சாதாரண ஒரு
வாழ்க்கையை வாழ்வதற்கும்
எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம்
வழங்கப்பட வேண்டும்.

கடவுளிடம் அந்தச்
சந்தர்ப்பத்தைத்தான் நாங்கள்
வேண்டி நிற்கின்றோம். அது
ஒன்றுதான் நாங்கள் எங்கள் வாழ்வில்
எதிர்பார்த்திருப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களின் சிந்தனையிலிருந்து...

**நிசாந்தினி விஜயசிங்கம், ௨0**

என்னுடைய வகுப்பில் ஒரு பெண்ணைத் தவிர ஏனைய மாணவிகள் இறந்துவிட்டனர். ஒவ்வொரு முறையும் நான் வகுப்பறைக்குச் செல்லும்போது, இந்த துன்பியல் நிகழ்வு எனக்பு நினைவில் வரும். அந்த நாளை நான் எப்படி மறப்பது? எப்படி தொடர்ந்து படிப்பது? என்னுடைய வகுப்பு மாணவர்களின் நினைவுகள் இல்லாமல் நான் எப்படி என்னுடைய பத்தகங்களைத் திறப்பது? ஏன் நாங்கள்? நாங்கள் என்ன செய்தோம்? அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு பெண்ணின் அசைவற்ற உடலையும் நான் தட்டி அசைத்துப் பார்த்தேன். என் வகுப்பு மாணவர்களில் பலர், நான் சிரித்துக் கதைத்த பல பெண்கள், என்னுடைய ஊரில் எனக்குத் தெரிந்த பல பெண்கள், அசைவில்லாமல் கிடந்தார்கள்.



இரத்தம், கிழிந்த உடுப்புக்கள், சிதறிய உடலங்கள், முடிவற்ற அப்பாவிப் பெண்களின் உடல்கள், அந்த நாளை நான் வாழம் மட்டும் நான் மறக்கமாட்டேன். என்னுடைய நண்பர்கள், வகுப்பு மாணவர்கள், அவர்களின் இளமை எல்லாம் போய்விட்டது, எல்லாம் அழிக்கப் பட்டுவிட்டது. ஒரு அடியில் நொருங்கி விட்டது. வாழ்க்கை இனி எப்பொழுதும் முன்புபோல் இருக்காது. பழைய நாட்கள் திரும்பாது. நான் வகுப்பில் இருக்கும்போது பழைய நாட்களை நினைத்துப் பார்ப்பேன். இந்தப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு வேண்டும். ஒரு கிபீர் எங்களின் மேல் வட்டமிடும் போதெல்லாம், நாங்கள் பீதியில் அது எங்களதைத் தான் தாக்க வந்தள்ளது என்று நினைப்போம்.



என்னால் படிக்க முடியாது, எனது மனதில் எதுவும் ஏறுவதில்லை. ஒரு நாள் நான் ஒரு மணி வரை முழித்திருந்து அடுத்த நாள் தேர்வுக்காகப் படித்துக்கொண்டிருந்தேன். படிக்கும்போது, என்னுடைய நண்பர்கள், வகுப்பு மாணவர்கள் ஆகியவர்களை நினைத்துப் பார்த்தேன். அவர்கள் இன்று உயிருடன் இருந்திருந்தால் அவர்களும் முழித்திருந்து படித்திருப்பார்கள். அதற்குப்பின்னர் என்னால் படிக்கவோ உறங்கவோ முடியவில்லை. என்னுடைய நண்பர்கள் வகுப்பு மாணவர்கள் என்னைச்சுற்றி இருப்பது போல் உணர்ந்தேன். அவர்கள் கதறுவதையும் சிரிப்பதையும் கேட்டுள்ளேன்.

அவர்கள் எதிர்காலத்தைப் பற்றிக் கதைப்பதைக் கேட்டுள்ளேன். அவர்களின் நினைவுகளை என்னால் போக்கமுடியவில்லை. என்னுடைய கண்களையும் காதுகளையும இறுக்கமாக மூடியபடி, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்க முற்பட்டேன். ஆனால் என் னுடைய முயற்சி பலனளிக்கவில்லை. இப்பொழுது எனக்கு இரவில் படிக் கவே விருப்பமில்லை. பதினொரு மணிக்க மேல் நான் முழித்திருப்பதில்லை. எந்த விதக் கொண்டாட்டங்கள் அல்லது விழாக்களிலும் என்னால் பங்கு பற்ற இயலவில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



என்னால் அந்த நிகழ்வுக்கு ஏற்ப சந்தோசமாக என்னுடைய மனதையோ எண்ணங்களையோ வைத்திருக்க முடியவில்லை. நான் எப்படி ஒரு விழாவிலோ திருமண நிகழ்விலோ கலந்து கொள்ள இயலும்? என்னுடைன் சேர்ந்து மகிழ்ந்து, சிரிக்க வேண்டிய மற்றைய பெண்கள் இல்லாமல் நான் எப்படி சிரித்து மகிழ்வது? என்னுடைய பிறந்த நாள் ஆகஸ்ட்14ம் திகதி, நான் எப்படி என்னுடைய பிறந்தநாளை இனிக்கொண் டாடுவது? என்னால் முடியாது. ஏனென்றால் அது கிபீரின் நாள் எனக்கு நினை வீருக்கின்றது. என்னுடைய நண்பர்கள் எல்லாம் என்னுடைய அறைக்கு வந்து பிறந்தநாள் வாழ்த்துக்களைக் கூறினார்கள்.

ஒரு பெண் எனக்கு ஒரு வாளித் தண்ணீர் எடுத்து வந்து, "இது உனக்கு என்னுடைய பிறந்த நாள் பரிசு," என்றாள். என்னுடைய 19வது பிறந்த நாளுக்கு நான் பெற்ற ஒரே ஒரு நல்ல பரிசு அதுதான், ஆனால் அந்தப் பெண் கூட இப்பொழுது இல்லை.

கண்களால் தெரியும் காயங்களைவிட, தோலுக்குக் கீழுள்ள காயங்கள், உள வியல் வடுக்கள், அவை ஆழமானவையும் பாரியதும் ஆகும். மற்றவைவைவீட அவை எங்களை அதிகம் பாதிக்கும். எங்களின் காயங்களைப் பார்க்கும் போதே, சிறு குழந்தைகள் கிபீர்கள் மற்றும் குண்டு தாக்குதல் தொடர்பாகப் பீதி அடைகிறார்கள். இப்படி ஒன்று இனி நடக்கக்கூடாது.

ஆனால் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கின்றன. கிளிநொச்சி மருத்துவமனைத் தாக்குதல், வேணாவில் தாக்குதல், வாகரைத் தாக்குதல், எனப் பட்டியல் தொடர்கின்றது. ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் அதிகமான குழந்தைகள் பாதிக்கப்படுகின்றார்கள். ஏதாவது செய்யப்பட வேண்டும். இது நிறுத்தப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்களின் சிந்தனையிலிருந்து...

**நிதர்சினி வீஜயசிங்கம், 17**

அன்றைய நாள் முதல் வேவு விமானம் சத்தம்கூட எங்களின்மனதில் பாரிய பயத்தை உண்டு பண்ணும். வேவு விமானம் வர ஆரம்பிக்க, நாங்கள் எங்கள் சிந்தனைகளை இழந்த கிபீரின் சப்தம் கேட்கத் தொடங்க எங்கள் மனவலிமையை முழுவதுமாக இழந்து விடுகின்றோம். வேவு விமானம் வந்தாலே நாங்கள் பள்ளிக் கூடத்துக்குக்கூட வருவதில்லை என்றால் கிபீர் வந்தால் என்ன செய்வோம் என்று கூறத்தேவையில்லை. சிறிய குழந்தைகள்கூட எங்களளவு பயந்தவர்கள் இல்லை. அவர்கள்கூட எங்களை விடத் தைரிய மாவர்களாக இருப்பார்கள்.



என்னால் பாடங்களில் சரியாகக் கவனம் செலுத்தவோ ஆசிரியரின் பாடங்களைக் கேட்கவோ முடிவதில்லை. நான் வகுப்பறைக்குள் உள்ளெ செல்கின்ற ஒவ்வொரு முறையும், சில நண்பர்களாலும், தெரிந்த முகங்களினாலும் எனக்கு வரும் நினைவுகள் எனது மனதைத் துன்புறுத்தும். அந்தப் பயங்கரத்தை மறைக்க நான் எவ்வ ளவோ முயற்சி செய்தாலும், வகுப்பைச் சுற்றிப் பார்க்கும்போது உண்மை என்னைத் தாக்கும். இப்பொழுது அதே மாதிரி இல்லை. அத இனி எப்பொழுதுமே அப்படியிருக்காது. நான் ஒன்றாகப் பள்ளிக்குச் சென்ற நண்பர்களையும் வகுப்பு மாணவர்களையும் எப்படி மறப்பது? ஆசிரியரின் குரலுக்கு பதிலாக, அங்குமிங்கும் ஓடித்தங்கள் உயிர்களைக் காக்க முயன்ற எனது நண்பர்களின் பயந்த, கலங்கிய குரல்களே எனக்குக் கேட்கின்றது.



அவர்களின் சிரித்த, உற்சாகமான குரல்களும், அதன் பின்னர் அவர்களின் கதறல்களும், தங்களைக் காப்பாற்றுமாறு கடவுளிடம்வேண்டி நின்ற குரல்களும் எனக்குக் கேட்கின்றன. அது அந்த கிபீர் வந்து எங்களின் மேல் வட்டமிடுவதை விட மோசமானது. எனக்கு பள்ளிக்கு வரவிருப்பமில்லை. படிக்க விருப்பமில்லை. எனக்கு என்னுடைய வீட்டினுள் என்னுடைய பெற்றோர்களின் பாதுகாப்பில் இருக்கவே வேண்டுகின்றேன். ஆனால் நான் உண்மையான இந்த வாழ்க்கையை விட்டு எவ்வளவு ஓடவேண்டுமென்று நினைத்தாலும், என்னால் முடியாது. எனக்காக இல்லாவிடிலும் எனது பெற்றோர்களுக்காக, அவர்களுக்கு ஏற்கனவே நிறையக் கவலைகள் உள்ளன. அதை அதிகரிக்க நான் விரும்பவில்லை. அவர்கள் என்னைப் பார்க்கும்போதெல்லாம், அவர்களின் கண்களில் வலியும் கவலையும் தெரியும். மற்றவர்கள் போல அந்த நாள்தான என்னுடைய இறுதி நாள் என்று நான் எதிர்பார்த்தேன். நாங்கள் யாருமே நாங்கள் அடுத்த நாள் உயிருடன் இருப்போம் என்று எண்ணவில்லை. ஆனால் கடவுளின் ஆசியால், ஒரு அற்புதம் நடந்தது போல் நாங்கள் பிழைத்துக் கொண்டோம். இருந்தாலும், இப்பொழுது கிபீர் வரும்போது நாங்கள் உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை எங்களிடம் இல்லை. அந்தத் தாக்குதலால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் என்னை இன்னமும் என்னுடைய நாளாந்த வேலைகளைச் செய்வதில்ப் பாதிக்கின்றது. அந்த சம்பவம் நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகிவிட்டாலும், என்னுடைய மனதில் ஏற்பட்ட வடுவோ அல்லது என்னுடைய உடலில் ஏற்பட்ட வலுவோ இன்னமும் ஆறவில்லை. என்னுடைய உள்காயங்கள் ஆறும் என்று எனக்கு நம்பிக்கையில்லை. என்னுடைய கடைசி மூச்சு இருக்கும் மட்டும் அது என்னிடம் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு கிபீர் விழுந்துவிட்டது என்பதை
அறிந்ததும் நான் உணர்ந்த அந்த
சந்தோசம் எனக்கு இன்னமும்
நினைவிருக்கின்றது. நடக்க
முடியாத நாங்கள் கூட எழுந்து
நின்று மகிழ்வில் ஆடத்
தொடங்கினோம்.

எல்லா கிபீர்களும் எனக்கு
முன்னால் மழை போல் துண்டு
துண்டாக விழ வேண்டும் என்பதே
எனது ஆசை.

அப்பொழுதுதான் என்னுடைய
மனம் ஆறுதல் அடையும்.
அந்த இறந்த பெண்களின்
ஆத்மாவும் அப்பொழுதுதான்
அமைதியடையும்.

அன்றைய நாள் பற்றி கதைப்பது
எனக்கு கடினமானது. ஆனால்
இவை அனைத்தும் ஐக்கிய நாடுகள்
அவைக்குச் சென்றடையும் என்ற
நம்பிக்கையில் நான் உங்களிடம்
இதைக் கூறுகின்றேன்.

ஒவ்வொரு நாளும் கிபீர்களினால்
பல மக்கள் இறக்கின்றார்கள்.
தயவு செய்து ஏதாவது செய்யுங்கள்.

தயவு செய்து இந்தக்
கொடூரத்தை நிறுத்துங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அவர்களின் சிந்தனையிலிருந்து...

**ரூபவதனி கணேசன், 2**

நாங்கள் தயாராக இருக்கவில்லை. அன்றைய நாளின் பயங்கரத்துக்கு நாங்கள் தயாராக இருக்கவில்லை. அப்படியான எதையும் நாங்கள் எதிர்பார்க்கவுமில்லை. அப்படியான பயங்கரத்தை நாங்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.



நாங்கள் சுதந்திரமாக விளையாட்டுத் தனமாக விருந்தோம். எங்களைத் தடுக்க எது வந்தாலும் அதை ஏற்றுக் கொண்டதோடு சகித்துக் கொண்டோம். எதையும் செய்வதற்கப்பயப்படவில்லை. நான் வீட்டில் தனியே தங்குவதற்கு எப்பொழுதும் பயப்பட்டதில்லை. இருட்டிய பிறகு வீட்டை விட்டு வெளியே செல்வதற்கு நான் எப்பொழுதும் பயந்ததில்லை. தனியே போவதற்கு பயந்ததில்லை. ஆனால் இப்பொழுது, நான் பலவீனமாகவும் எவரிலோ தங்கியுள்ளது போல் உணர்கின்றேன்.



என்னுடைய நாளாந்தக் கடமைகளுக்கு நான் யாரிலாவது தங்கி இருக்க வேண்டியுள்ளது. என்னுடைய பக்கத்தில் யாராவது ஒருவர் எப்பொழுதும் தேவைப்படுகின்றார். மிகவும் இயலாததுபோல உணர்கின்றேன். தனியே வீட்டில் இருப்பது போன்ற சின்ன விடயம் கூட பயங்கரமாக உள்ளது.



"கிபீரின் சப்தம் கேட்டவுடன் அவள் மயங்கி விடுவாள். அதன் பின்னர் சுய நினைவு திரும்பியவுடன் கட்டுப்படுத்த இயலாத அளவு கண்ணரும், அழுகையும் வரும். வேவு விமானம் வந்தால் கூட ரூபா பயத்தில் நடுங்கித், தடுமாறத் தொடங்கி விடுவார். அழுவதையும் நடுங்குவதையும் நிறுத்தச் சொல்லி பேசியதன் பின்னர்தான் நிறுத்துவாள்."

— அண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்னுடைய நாளாந்த வாழ்க்கை ஒரே மாதிரி இல்லை. நிறைய நேரம் இருந்தால் தசைகள் இழுத்தக் கொள்ளும். குழாய் பொருத்தப்பட்ட இடம் சில நேரங்களில் விறைத்தது போல் உணர்வேன். சில நேரங்களில் கழிவறைக ளைப் பயன்படுத்துவது மிகவும் கடினமாக இருக்கும்.


" நாங்கள் யாழ்ப்பாணத்தில் பாரிய இடப்பெயர்ப்பின் போது இடம்பெயர்ந்தோம். அதன்பின்னர் எங்களுக்கு எப்பொழுதுமே நிலை யான வீடு இருந்ததில்லை. இதனால், குழந்தைகளின் கல்வி மிகவும் பாதிக்கப் பட்டுவிட்டது. இவளுக்கு ௨௨ வயதாகினாலும் ரூபாதான் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர் படிப்பை மேற்கொள்வாள் என நாங்கள் நம்பினோம். ஆனால் இப்பொழுது அது இயலாதது போல் உள்ளது. விதி எங்களுக்கு எதிராக உள்ளது போல் உள்ளது. அவள் இந்த வருடம் பரீட்சை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அந்த சம்பவத்தின் பின்னர் அவர் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவில்லை. எங்களுடைய கனவுகளும் பல பெற்றோர்களின் கனவுகளைப் போலவே உடைக்கப்பட்டு விட்டன."

— தாய்



இறந்தவர்கள் எல்லோருக்கும் அவர்கள் என்ன கூறப்போகின்றார்கள்? தொலைந்து போன் உறவுகளுக் கும் கனவுகளுக்கும் எப்படி ஈடு செய்யப் போகின்றார்கள்? என்னுடைய குடும்பமும் நானும் ஐக்கிய நாடுகள் சபையி டம் ஒரு கோரிக்கையை முன் வைக்க விரும்புகின்றோம். வடகிழக்கு சிறீலங்காவில் வான் தாக்குதல்களை நிறுத்த ஏதேனும் முயற்சியை எடுக்கவும். அப்படியென் றால்தான் நீங்கள் ஒவ்வொரு நாளும் இறந்த கொண்டி ருக்கும் தமிழ் மக்களின் உயிர்களைக் காப்பாற்ற இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







2

# உடல் ரீதியான தாக்கங்கள்

என்ன மாதிரியான உளத் தாக்கங்கள் இருப்பினும், ஒரு வான் தாக்குதலின் கசப்பான உண்மைகள் ஒரு உடல் ரீதியான காயத்தினை அல்லது இறப்பினை பார்க்கும்போதுதான் வெளிப்படையாகின்றது. வட கிழக்குப் பிரதேசங்களில் இத்தகைய காட்சிகயை நாம் வீதிகளில் பரவலாகக் காண்கின்றோம். எலும்புக் காயங்கள் மற்றும் அங்கங்களை இழந்தவர்களை வடகிழக்கு வீதிகள் அதிக எண்ணிக்கையில் தாங்கி நிற்கின்றன.

கீழே உள்ள வரைபடத்தில் குறிப்பிடப்பட்டது போன்று நூற்று எழுபத்து எட்டுப் பேர் இறக்க, நானூற்றி எழுபது பேர் வான் தாக்குதல்களினால் அங்கங்களை இழந்துள்ளார்கள். வன்னிப் பகுதியில் மாத்திரம், எழுபத்து ஏழு பேர் இறக்க, நூற்று எண்பத்து ஏழு பேர் காயமுற்று உள்ளார்கள். மட்டக்களப்பில் எழுபத்திரண்டு பேர் இறக்க இருநூற்று எழுபத்தியேழு பேர் காயமுற்றுள்ளார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற் பாதிப்பு

பொதுவாக ஒரு தாக்கதலில் தப்பியவர் மூச்சை அடைக்கும் புகை மூட்டம் தொடர்பாகக் கதைப்பார். குண்டுகள் வெடித்தவுடன் ஒரு பெரிய புகை மண்டலம் ஒன்று உருவாக்கப்படுகின்றது. இது ஒரு பலமான இரசாயன மணத்தை விட்டச் செல்லும். ஒரு வான் தாக்குதலின் போது ஏற்படும் பயத்தினாலும் உயர்நிலை பதட்டத்தினாலும் உயிர தப்பியவர்கள் அதிக அளவில் இந்தப் புகையை நுகர வேண்டி ஏற்படுகின்றது. உயர் அழுத்தங்களின் போது பயத்தின் போது அவர்களுக்கு ஏற்படும் மூச்சடைப்பு மற்றும் நெஞ்சு வலி ஆகியனவற்றுக்கு இதுவே காரணமாகக் கொள்ளப்படுகின்றது. இருப்பினும் ஒரு குண்டில் உட்புகுத்தப்பட்டுள்ள இரசாயனப் பொருட்கள் எதுவென்று தெரியப்படுத்தப்படாததாலும் அடையாளப்படுத்தப்படுத்தப்படாததாலும் இந்தக் கூற்றை உறுதி செய்ய இயலாதுள்ளது.

குண்டின் துண்டுகளின் பரவாகச் சிதறும் தன்மையினாலும் வேகத்தினாலும் வான் தாக்குதல்களின் போது உடலின் பல பாகங்களலும் காயம் ஏற்படுகின்றது. காயங்கள் மண், கல் மற்றும் மரத்தூள்களினால் மூடப்பட்டு இரத்தத்துடன் இணையும் போது காயத்தின் தன்மையைக் கண்டறிவதும் கடினமாகின்றது.

வான் தாக்குதலால் ஏற்படும் உடல் ரீதியான காயங்கள் பற்றிக் கதைக்கும் போது, அவை உடலின் எந்தப் பகுதியிலும் குண்டுத் துண்டுகள் தசையைத் தாக்கும் பகுதியில் இருக்கலாம். ஒருவர் அவர்களின் உடலின் ஒரு பகுதியை மட்டம் இழக்காமல், அது பல காயங்களை ஏற்படுத்தி, இரத்தக்குழாய்களையும், நாடிகளையும், தாக்கி எலும்புகளை முறித்தும் விடும். வயிற்றில் அல்லது நெஞ்சுப் பகுதியில் நுழையும் குண்டுத் துண்டுகள் உடலின் உள் புகுந்து, உடலின் வழமையான தன்மையில் பாரிய தாக்கங்களை உண்டு பண்ணும். பல தடவைகளில் காயப்பட்டவர்களின் செமிபாட்டுத் தொகுதிகள் முழுமையாக சேதமாக்கப்பட்டோ அல்லது இதயத்தினில் இரத்தம் கசிந்தோ காணப்பட்டுள்ளது. இதனால் வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் ஏற்படும் காயங்களினால் இறப்பது மிகவும் பொதுவாக நடைபெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்துக்கு, மருத்துவக் கலாநிதி சுயந்தன் (சுகாதார சேவைகள் மையம்) அவர்களின் கருத்துப்படி கொடுக்கப்பட வேண்டிய சிகிச்சையை அடையாளம் காண வயிற்றுக் காயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒருவர் அன்றைய நாள் உணவு உட்கொண்டாரா என்பதை உறுதிப் படுத்தாமல் அந்த நோயாளிக்கு மயக்க மருந்தைக் கொடுத்து வயிற்றில் ஏற்பட்ட காயத்துக்கு சத்திர சிகிச்சையை மேற்கொள்வத இயலாத காரியம். இதனால் மருத்துவர்களுக்கும், சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கும், இதர விசேடத்துவம் பெற்ற மருத்துவர்களுக்கும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவது கடினமாக் கப்படுகின்றது. பாரிய காயங்களைக்கொண்ட நோயாளிகள் வழமையில் சுயநினைவில்லாத நிலையிலேயே இருப்பார்கள். அவர்களால் கதைக்கவோ தங்கள் உணர்வுகளை வெளிக்காட்டவோ இயலாமல் இருப்பதால், அவர்கள் உடல் நிலை மற்றும் உணவு செமிபாட்டு நேரம் ஆகியவற்றை அறிந்து கொள்வது இயலாதது ஆகின்றது.

கூடுதலான வான் தாக்குதல்களில் காயமடைந்தவர்கள் சமூகசேவை வழங்குபவர்கள், மனித உரிமையாளர்கள் அல்லது, அந்த நிலவரம் தொடர்பான உடனடி அறிவு உள்ளவர்கள் ஆகியவர்களால் கொண்டுவரப்படுவதால், அவர்களிடம் இருந்து தேவையான தகவல்களை அறிந்து கொள்ளும்சாத் தியம்மிகவும் அரிதாகவே இருக்கும்.

எனினும், இத்தகையான வயிற்றுக் காயங்களுக்கு உடனடி சத்திர சிகிச்சை தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


மேலும், ஓர வான் தாக்குதலின் பின்னால், போர் இடம்பெறும் பிற்பட்ட பிரதேசங்களில் போதிய மருத்துவமனை வசதிகள் இல்லததால், காயப்பட்டவர்க ளுக்கு சரியான முறையில் சிகிச்சைகளை வழங்க இயலுவதில்லை. கூடுதலாக "சிறிய காயங்கள்" என வகுக்கப்பட்டவர்கள் வசதிகளற்ற மருத்துவ மையங்களுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படுவது சில நேரங்களில் போதுமானதல்ல.

வான் தாக்குதல்களினால் ஏற்படும் தலைக் காயங்கள் பாரிய வேதனைக ளையும் ஆபத்துக்களையும் ஏற்படுத்தி விடம். நரம்பியல் நிபுணர்களோ சத்திர சிகிச் சையில் விசேடத்துவம் பெற்றவர்களோ வடக்கு கிழக்கில் இல்லாத காரணத்தி னால் தலைக் காயங்களுக்கு சிகிச்சை வழங்குவது மிகுந்த கடினமாகின்றது. மருத் துவக் கலாநிதி திருமதி. பத்மலோசினியின் கூற்றுப்படி, சில குறிப்பிடக்கூடிய எண் ணிக்கையிலான நோயாளிகள் அப்படியான காயங்களின் பின்னர் சில வாரங்களில் தொடர்ச்சியான சுயநினைவு இழந்த நிலைக்கத் தள்ளப்படுகின்றனர்.

செஞ்சோலை வளாகத்தில் நடாத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல்க ளில் காயப்பட்டவர்கள் பலர் பல காயங்களைக் கொண்டுள்ளார்கள். இரண்டு கால்க ளும் காயமடைந்த நிலை, கைகள் மற்றும் கால்களில் இருந்த இரு எலம்புகளும் முறிவடைந்த நிலை, மற்றும் நெஞ்சைக் கிழித்தபடி சென்று மறுபுறம் வெளி வந்த குண்டுத்துண்டுகளினால் வயிற்றுக் காயங்களும் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமே பழைய மாதிரி இல்லை

ஜெகதீஸ்வரி நீலகண்டன் (இடம்பெயர்ந்தவர்), 26
வேணாவில்


மே மாதம் 29ம் திதி புதுக்குடியிருப்பில் உள்ள வேணாவில் என்னும் கிராமத்தில் நடைபெற்ற வான் தாக்கதலில் நான் காயப்பட்டேன். என்னுடைய இடுப்புக்கு பின்னாலும், காலிலும் காயம் ஏற்பட்டது. என்னுடைய இடுப்பில் பட்ட அந்த குண்டுத் துண்டு கொஞ்சம் ஆழமாகப் போயிருந்தால் எனக்கு உடல் வாதம் ஏற்பட்டிருக்கும் என மருத்துவர்கள் கூறினார்கள். அதி'டவசமாக, கடவுளின் துணையால் அப்படி எதுவும் நடக்கவில்லை. என்னுடைய காலில் உள்ள காயம் குண்டுச் சிதறல் எனது தோலைத் துளைத்துச் சென்று காலின் அடுத்த பக்கமாக வெளியில் வந்ததால் ஏற்பட்டது. கிபிரின் சப்தம் கேட்டபோது நான் வீட்டில் இருந்தேன். காதை அடைச்சுக் கொண்டு அதன் சப்தம் மிகவும் அருகாக வந்து கொண்டிருப்பதை என்னால் கேட்கக்கூடியதாக இருந்தது. நான் வீட்டை விட்டு வெளியெ வர, முதல் குண்டிலேயே நான் காயப்பட்டு விட்டேன். அது என்னுடைய காலுக்குள்ளால் துளைத்துச் செல்ல நான் அசைவற்று ஆகிவிட்டேன். அடுத்த துண்டு நேரே என்னுடைய இடுப்பின் பின் பக்கமாக சென்றபோது நான் குப்புறப்படுத்துக் கிடந்தேன. இந்த நேரத்தில் நான் காளி அண்ணா, எங்கள் ஊரில் கராத்தே கற்பிக்கும் ஆசிரியர், அவரிற்குத் தான் நன்றி கூறவேண்டும். அவர்தான என்னைக் காப்பாற்றி அவரின் உந்துருளியில் என்னை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார். அவர் நேரத்துக்க கடவுள் மாதிரி வரவில்லை என்றால், அடுத்த குண்டிலேயே எனது வீடு போனதைப் போல் நானம் போயிருப்பேன். நான் ஒரு பத்திரிகையில் கணக்காளராக வேலை செய்கின்றேன். மேலதிக நேரங்களில் புத்தகம் கட்டும் வேலையும் செய்கின்றேன். என்னுடைய வேலைக்கு அதிக உடல் வலு தேவையில்லை. ஆனால் நான் அதிக நேரம் இருக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்தக் காயத்தினால் அழுத்தம் பின்னால் ஏற்படும் போது எனக்க நிறைய வலி ஏற்பட்டு தொடர்ந்து நீண்ட நேரம் இருக்க இயலாமல் இருக்கும். அதே நேரம் என்னால் வேகமாக நடக்கவோ, நிறைய துூரத்துக்கு நடக்கவோ இயலாமல் இருக்கும். ஈருருளி ஓட்டுவதும் இயலாதது.

கொஞ்ச நேரம் நடக்கவே என்னுடைய கால்கள் வீங்கி வலியில் சில நாட்கள் இருப்பேன். கிட்டத்தட்ட ஒரு மாத ஓய்வின் பின்னர், என்னுடைய மனநிலையில் மாற்றம் வந்து நான் இந்த மனத்தளர்வில் இருந்து வெளிவருவதற்காகவே நான் வேலைக்கு வந்தேன். ஆனால் எப்பொழுதும் பயம் இருப்பதோடு, வாழ்க்கையும் சக்தியும் இழந்தது போலவே இருக்கின்றேன். என்னுடைய சக கூட்டாளிகளுடன் நான் சகஜமாக இருக்க அதிகம் முயற்சித்தாலும், அப்படி இருப்பது கொஞ்சம் கடினமாகத் தான் உள்ளது.

தொடர்ச்சியான வலி என்பதோடு எனக்கு சந்தோ சத்தை இழந்தது போலுள்ளது. வெறுமையாக உணர்கின்றேன். என்னடைய முகம் எந்த வித உணர்வும் அற்று, பயத்தினால் வெறுமையாக உள்ளது. நானும் உணர்வு மேலோங்கியதனால் பயமுறுத்தப்படுகின்றேன். என்னைப் பாருங்கள், என்டைய நண் பர்கள் எல்லோரும் நான் ஏன் சிரிப்பதில்லை என்று கேட்கிறார்கள், நான் ஏன பயப்படு கின்றேன் என்று கேட்கிறார்கள். என்னுடைய முகம் பயத்தில் உறைந்தது போல் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய காயங்களினால் நான் துணி துவைப்பதோ, வீட்டைச் சுத்தம் செய்வதோ, ஈருருளியை ஓட்டுவதே அல்லது என்னுடைய தந்தையைக் கவனிக்கவோ இயலாமல் உள்ளது. நிகழ்வுகள், அல்லது விழாக்களில் என்னால் முழுமையாக பங்கெடுக்க இயலாது. ஏனென்றால் தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிற்கவோயிருக்கவோ இயலாது. எப்பொழுதும் மற்றவர்களில் தங்கி உள்ளேன். என்னுடைய கணவன் மிகவும் நல்ல முறையில் என்னை ஒரு குழந்தை போலக் கவனித்துக் கொள்கிறார். நான் வயதான நேரத்தில் என்னுடைய தந்தையைக் கவனிக்கவேண்டும். ஆனால் அவர் என்னைக் கவனித்துக் கொள்கிறார். இந்த பயமுறுத்தும் குண்டுகளால் தாக்கப்பட்டு என்னைப் போல் பலர் உள்ளார்கள். இந்தக் கொரூரத்தில் இருந்தும் பயங்கரத்தில் இருந்து விடுவிக்கப் படவேண்டிய அப்பாவிப் பொதுமக்கள் இவர்கள். நான் வேலைக்கு வரும் போது, கிபீர் வரும் என்பது பற்றியும், அதன் தாக்கம் பற்றியும் பயம் இருந்து கொண்டேயிருக்கும். நான் வீட்டில் விட்டு விட்டு வரும் எனது குடும்பத்துக்காகவும் நான் பயப்படுவேன். பயம் என்பது மிகவும் கொடூரமானது. குறிப்பாக உணர்வு மேலோங்கும் போது அது மிகவும் பயங்கரமானது. அனைவரிடமும், சர்வதேச சமூகத்தில் உள்ள அனைவரிடமும் நான் மன்றாடிக் கேட்கின்றேன். ஏதாவது செய்யுங்கள். இங்கு வாழ்வது நரகம் போலுள்ளது.



*அவரால் தனது உணர்வுகளையும், எண்ணங்களையும் தெளிவாக வெளிப்படுத்த முடியவில்லை. அவருடன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது கடினமாக இருந்தது. தன்னைத் தானே விளங்கிக் கொள்ளவும் தன்னுடைய கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் அவருக்கு கடினமாக இருந்தது. அவருடனான இந்த சந்திப்பின் போது உடனிருந்த நண்பர் ஒருவர் அவருடன் கதைப்பதற்கு உதவினார். கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் பாவனையை அவரின் முகம் வெளிக்காட்டியதோடு பயந்த நிலையிலும் இருந்தார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவச் சேவை – ஒரு பார்வை


வான் தாக்குதல்களால் கொண்டு வரப்பட்ட மக்களைக் கூடுதலாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, ஆகிய பொது மருத்துவமனைகளிலும், மற்றும் சுகாதார சேவைகள் மையத்திலுமேயே சிகிச்சை வழங்கப்படுகின்றது. சுகாதார சேவைகள் மையத்தின் இயக்குனரின் கருத்துப்படி செஞ்சோலை வளாக சம்பவத்தின் போது ஏறத்தாள நமற்பது பேர் சிகிச்சைக்கு அங்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களில் ஒன்பது பேர் வயிற்ற சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய வயிற்றுக் காயங்களுடன் இருந்தனர். வான் தாக்குதலின்போது ஏற்பட்ட கூடுதலான காயங்கள் வயிற்றுக் காயங்களாகவோ பாரிய வெட்டுக் காயங்களாகவோ இருந்தன.

இதனால் சிகிச்சை வழங்குவதற்குக் கடினமாகயிருந்தது. பாரிய இரத்த இழப்பினால் இரத்தம் செலுத்த வேண்டிய நிலை கூடுதலான வான் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களிடையே காணப்பட்டது. பொது இரத்த வங்கிகள் குறைந்தளவு இரத்தத்தையே களஞ்சியப்படுத்தி வைத்திருந்ததால், பலர் கொடுக்க முன்வந்தார்கள். உள்ளூர் மக்களின் உடனடி உதவியுடன் உடனடி இரத்தப் பரிமாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.


செஞ்சோலையில் இடம்பெற்ற மிகப்பாரிய விபரீதத்தின் போது மருத்துவ முறையில் ஏற்பட்ட மற்றுமொரு பாரிய குறைபாடு போதிய மருத்துவ உபகரணங்கள் இல்லாததும் ஆகும். சுகாதார சேவைகள் மையத்தின் கருத்துப்படி, ஏ9 நெடுஞ்சாலையை மூடியதன் விளைவாக, மருத்துவப் பொருட்கள் வந்தடைவதில் ஒரு பாரிய பின்னடைவு ஏற்பட்டது. ஒரு சத்திர சிகிச்சைக்குத் தேவையான இரு முக்கிய பொருட்களான மயக்க மருந்தும், ஒக்சிசன் குழாயும், வந்தடையாமல் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை, வடக்கு கிழக்கில் இருந்த மருத்துவ சமூகத்தில் பல க'டங்களை உருவாக்கியது. இப்படியான க'டங்கள் இருப்பினும், பெரிய எண்ணிக்கையிலான உடற் காயங்களுக்கு முழுமையான சிகிச்சை வழங்கப்பட்டது. இருப்பினும் இன்னமும் ஆறாத பல உளவியல் ரீதியான பிரச்சனைகள் தொடர்ந்தும் உள்ளன. உளவியல் நோய்கள் தொடர்பான அறிவு மக்கள் மத்தியில் போதியளவு இல்லாத காரணத்தினால், நோயின் இறுதிக் கட்டங்களிலேலே இது அடையாளம் காணப்படுகின்றது. சிகிச்சை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. கியுடெக் (ஊருனு நுஊ), சுகாதார சேவைகள் மையம் (ஊர்ஊ) மற்றும் அன்னை இல்லம் ஆகியவை நோயாளிகளுக்கு உளவியல் ரீதியான உதவிகளை வழங்கும் சில நிறுவனங்கள் ஆகும். உடல் ரீதியான சேதத்தை விட உளவியல் ரீதியான சேதம் ஒரு கொடூரமான, நீண்ட கால அச்சுறுத்தலாக மாறும் என்பதால் சிகிச்சையில் கவனம் எடுக்கப்பட வேண்டும். இந்த உளவியல் ரீதியான பிரச்சனைகள் சிகிச்சை குறைவான காரணத்தினாலும் போதிய அறிவின்மையினாலும் இன்னமும் பூதாகரமாக உருவெடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உளவியல் தாக்கங்கள்


கண்ணால் பார்ப்பதை விட தீர அறிந்து கொள்ளவேண்டிய தேவை எதிலும் உள்ளது. மேலோட்டமாகப் பார்க்கும்போது, அது ஒரு வெட்டு, உடைந்த எலும்பு அல்லது ஒரு வெட்டப் பட்ட கால் ஆக இருந்தாலும், உள்ளே.... உள்ளே, ஒரு துன்பகரமான உண்மை ஒன்று பொதிந் துள்ளது, அதுதான் ஒரு வான் தாக்குதலின் பயங் கரமான உளவியல் தாக்கம். நாங்கள் ஒரு வான் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர் ஒருவரின் உளவி யல் தாக்கத்தைப் பற்றி ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னணி

முப்பது வருடங்களாக வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்கள் ஒரு கொடூரமான உள்நாட்டு யுத்தத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். இறப்பு, இடப்பெயர்வு, நிலையற்ற தன்மை ஆகியவை தமிழர்களின் வாழ்வில் வழமையானவையாக மாறி விட்டன. இந்த உள்நாட்டு யுத்தம் எவ்வளவு பயங்கரமானதாக இருப்பினும், அது தமிழர்களின் வாழ்வில் இன்றியமையாததாகிவிட்டன.

குண்டுத் தாக்குதல்கள், வான் தாக்குதல்கள் ஆகியவனை தமிழர் வரலாற்றில் ஒரு பங்காகி விட்டன. இருப்பினும், போர்நிறுத்த காலகட்டத்தில், அதற்கு முன்னராக நவாலியூர் சென். பீட்டர் தேவாலயம், நாகர்கோவில் பாடசாலை போன்று இடம்பெற்ற வான் தாக்குதல்களில் இருந்து மீள்வதற்கு தமிழர்களுக்கு நேரம் வழங்கப்பட்டது. அந்த நீண்ட வருடங்களின் போதெல்லாம், தமிழர்கள் எப்பொழுதுமே நாளை தொடர்பான அவர்களின் நம்பிக்கையை இழக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபவம்

நாளை நாளை நாங்கள் பார்ப்பதற்கு நாங்கள் உயிருடன் இருப்போம் என்ற நினைக்கவில்லை," வான் தாக்குதல்களில் தப்பி வந்தவர்கள் பொதுவாகக் கொடுக்கும் வாக்குமூலம் இதுவாகும். ஒரு மூடப்பட்ட பதுங்குகுழியில் இருந்தாலென்ன, திறந்த வெட்டைப் பிரதேசத்தில் இருந்தாலென்ன, அகழியில் இருந்தாலென்ன, மரத்தின் நிழலில் இருந்தாலென்ன, பாதிக்கப்பட்டவர்கள் அனைவரின் எண்ணமும் சிந்தனையும் ஒரே மாதிரியே இருந்தன. அனைவரும், அவர்களில் மிகவும் துணிவானவர்கள் கூட, பயத்தை அனுபவித்திருப்பார்கள். ஏற்கனவே ஒரு தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஒருவரில் பயம் அதிகமாக இருக்கும். அந்த நாள் தொடர்பான பாரிய பயமும், அடுத்த நாளைக் காண்பாமோ என்னும் நம்பிக்கையின்மையும் காணப்படும். வான்கலன்கள் தாழப் பறக்கப் பறக்க, வாழ்க்கையில் உள்ள நம்பிக்கையும் வீழ்ச்சி அடையும் என்பதில் எந்த வித ஆச்சர்யமும் இல்லை.

ஒரு இருண்ட பதுங்குகுழியின் இருட்டில், அனைத்து பயங்கரமான எண்ணங்களும் மோசமான பயங்களும் மேலெழும்பும். அந்த நாள் தொடர்பான பயம், வாழ்க்கை தொடர்பான பயம், குழந்தைகள் தொடர்பான பயம், காயங்கள் தொடர்பான பயம், இப்படியாகப் பல் பயங்கள் அனைவரையும் சூழ்கின்றன. பார்வையின்மை, பயமூட்டும் தன்மை, ஒக்சிசன் குறைபாடு ஆகியவற்றினால் பதுங்குகுழிகள் பல இரசாயன மற்றும் நரம்பியல் மாற்றங்களை உடலுக்கும் உருவாக்குகின்றன. மூச்சு அதிகரித்தல், இதயத்துடிப்ப அதிகரித்தல், உடல் உணர்வு மேலோங்கலாலும், பயத்தினாலும் நடுங்க, உடலைப் பயம் ஆட்கொள்கின்றது. இந்தப் பதுங்குகுழிகளில் வாழும் பூச்சிகள் மற்றும் பாம்புகளினால் கடிபடலாம் என்னும் பயம் வான் தாக்குதலில் இருந்து தஞ்சம் கோரும் இவர்களின் அழுத்தத்தை மேலும் அதிகரிக்கின்றது. ஒரு திறந்த பதுங்குகுழி, ஐ – பதுங்குகுழியாகவோ அல்லது அகழியாகவோ இருந்தாலும் போதியளவு சூரிய வெளிச்சமம் நல்ல ஒக்சிசனும் கிடைக்கும். இருப்பினும், ஒருவர் எதிர்பார்ப்பதற்கு எதிர்மாறாக, நல்ல சூரிய வெளிச்சமும் காற்றும் ஒருவரை தறர்வாகவோ அமைதியாகவோ வைத்திருக்காது. உண்மையில், இதன் எதிர்மாறாகவே உண்மையுள்ளது. வான் தாக்குதல்களுக்கு கூடுதலாக ஆளாக்கக் கூடியவர்களாகவும், எதுவும் செய்யயியலாதவர்களாகவும் இவர்கள் உணர்வார்கள். ஒரு குண்டுத்தாகுதலினால் ஏற்படும் தாக்கத்தை திறந்த பதுங்குகுழிகள் குறைத்தாலும், அது முழுமையான பாதுகாப்பை வழங்காது. ஒரு மூடப்பட்ட பதுங்குகுழி ஏனையவற்றை விட கூடுதல் பாதுகாப்பை ஏற்படுத்தும் என்றா லும், அது எந்த வகையிலும் குண்டு புகாத ஒரு எனக் கூற இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னதிர்வு

ஒரு வான் தாக்குதலின் பயங்கரம் அந்தத் தாக்குதல் நடந்தபினனெரே பாரிய அளவில் வெளிப்படுத்தப்படும். ஒரு விபரீதத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் ஒருவருக்கு தாக்குதல் வான்கலங்கள் தொடர்பான பயமூட்டப்பட்டாலும், அதில் பாதிக்கப்படும்வரை அதன் முழுத் தாக்கத்தை அவர் அறிந்து கொள்ள இயலாது. ஒருவர் ஒரு தாக்குதலில் ஒருமுறை பாதிக்கப்பட்டதன் பின்னர், அவர்கள் பயம், பதட்டம், அழுத்தம், மன அழுத்தம், மற்றும் உணர்ச்சி மேலோங்குதல் ஆகிய உளவியல் பாதிப்புக்களுக்கு உள்ளாகுவார்.

ஒரு குண்டுத்தாக்குதலின் அதிர்வை அனுபவித்த ஒருவர் ஒரு மனித உயிர் தங்கள் கண்களுக்கு முன் காயப்படுவதை அல்லது கொல்லப்படுவதை கண்ட ஒருவர், ஒரு தாக்குதல் விமானம் கீழிறங்கும் போது அதைக் கேட்ட ஒருவரால் அதை எப்போமுதுமே மறக்க இயலாது. போருக்குப் பின்னராக நாடுகளில் மேற்கொள் ளப்பட்ட வரலாற்று ஆய்வுகள் அதில் உயிர் தப்பியவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உளவியல் பாதிப்புக்கு உட்பட்டவர்களாகவும், உயிர் தொடர்பான அச்சம் உடையவர்களாகவும், இருப்பார்கள் என்ற எதிர்வு கூறுகின்றன. அதன் சப்தம் மட்டுமே அவர்கள் உயிர் வாழ்வதை நினைத்து வருத்தப்படவும் அவர்களைத் தொடர்ச்சியாகத் துன்புறுத்தவும் போதுமானது.



சம்பவம் நடந்த இடத்தையொ, அதில் கொல்ப்பட்டவர் அடிக்கடி காணப்படும் ஒரு இடத்தையோ பார்ப்பவருக்கு அது ஒரு பாரிய மன அழுத்தத்தைக் கொடுக்கும். வான் தாக்குதல்களின் வலியை சிறுவர்களே அதிகம் அனுபவிக்கின்றார்கள். இந்தக் காலப்பகுதியில் வடக்குக் கிழக்கில் குழந்தைகள் தங்களுடைய குழந்தைத் தனத்தையும் சிறுவயதின் சுகங்களையும் இழப்பதற்கு கிபீர்களும் மிக்களும் மிக முக்கியமான காரணமாக இருக்கின்றது என்பது ஒரு பயங்கரமான உண்மையாகும்.

அன்னை இல்லம், பாதிரியார் றெஜினால்டினால் அடையாளப்படுத்தப்பட்டதைப் போன்று ஆதரவற்ற குழந்தைகள் ஏற்கனவே தங்கள் குடும்பங்களை இழந்த அதிர்ச் சியை உள்வாங்கியதோடு, தொடர்ச்சியாக வான் தாக்குதல்களினால் பயமுறுத்தப்பட்டு உள்ளார்கள். குழந்தை உளவியலைப் படித்த ஒருவரின் பார்வையில் இருந்த பார்க்கும் போது, செஞ்சோலையில் நடந்த நிகழ்வுக்குப் பின்னர், காந்தருபன் அறிவுச் சோலையில் உள்ள சிறுவர்கள் பாரிய அதிர்ச்சியையும், உளவியல் பாதிப்பையும் வெளிக் காட்டினர் என அருட்தந்தை றெஜினால்ட் அவர்கள் குறிப்பிட்டார். திடீர் கோபங்கள், பயங்கரமான கனவுகள், தனிமைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள், ஆகஸ்ட் 14 தாக்குதலின் பின்னர் பொதுவாக வெளிக்காட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் தாக்குதல் விமானங்கள் மற்றும் வேவு விமானங்கள் ஆகியன ஒரு குழந்தையின் வளர்ச்சியில் மிகப் பெரிய அழிவை நோக்கிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. தனது உணர்வுகளை கண்ணீராலும் சிரிப்பினாலும், மட்டுமே வெளிப்படுத்தும் ஒரு குழந்தை ஒரு வேவு விமானத்தின் சப்பத்தினால் தொடர்ச்சியாக அழுதபடியே இருக்கும். ஒரு விமானத்தின் பின்விளைவுகளையோ தாக்குதல் விமானங்களினால் ஏற்படுத்தப்படும் விபரீதங்களையோ அறிந்திராத நிலையில், அனைத்துக் குடும்ப அங்கத்தவர்களும் தன்னுடன் ஒரு பதுங்குகுழியின் பாதுகாப்பில் இருக்கும்வரை அழுகையை நிறுத்தாது.

இந்த விமானங்களின் பாரிய சப்தம் மட்டுமே பல குழந்தைகளினதும் சிறுவர்களினதும் உளவியலைப் பெரிதாகப் பாதித்துள்ளது. வேவு விமானங்களோ தாக்குதல் விமானங்களோ ஒரு பிரதேசத்தில் உலாவும் பட்சத்தில் பள்ளிக்குச் செல்வதைப்பற்றியோ பாடத்தைத் தவற விடுவது பற்றியொ உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவர்கள் கூட மறுபரிசீலனை செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு அதன் சப்தமும் அதனால் ஏற்பட்ட விளைவுகளின் கதைகளுமே போதுமானது. அவர்கள் அதைப் பார்க்க விரும்ப மாட்டார்கள். மைதானமே சிறுவர்களுக்கு பிரதான இடமாக இருந்த காலங்கள் மாறி, இன்றைய சிறுவர்கள் வீடுகளின் சுவர்களில் தங்கள் பெற்றோரின் அருகில் இருப்பதையே தங்களுக்குப் பாதுகாப்பு என நம்புகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

வான் தாக்குதல்களினால் உண்டாக்கப்படும் உடல் ரீதியான காயங்களே மிகவும் வெளிப்படையானதும் உணர்வுபூர்வமானதாகவும் இருந்தாலும், அது அதிகூடிய பாதிப்பானது என்று கூறிவிட இயலாது. ஒரு தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டதன் பின்னரான அதிர்வு, காயப்பட்ட ஒருவரைத் தெரிந்திருத்தல் அல்லது ஒரு தாக்கதல் தொடர்பாகத் தெரிந்திருத்தல் ஆகியவையே உளவியல் பாதிப்பை உண்டாக்கலாம்.

இறந்தவர்களினதும் காயப்பட்டவர்களினதும் குடும்பங்கள் இந்த விபரீதத்தின் நடுவில் ஆதரவற்ற நிலையில் நின்று கொண்டு தங்கள் வாழ்வியலை தொடரந்து நடாத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதனால் வரும் விளைவுகளை சந்திக்க வேண்டியவர்களாக இவர்கள் உள்ளார்கள். குடும்பத்துக்கும் நண்பர்களுக்கும் இறப்பு என்பது ஒரு பாரிய அதிர்ச்சியைக் கொடுக்கும். மன அழுத்தம், மனச்சிதைவு, உணர்வு மேலோங்குதல் போன்ற உளவியல் வியாதிகளுக்குப் பிரதான காரணமாக இது உள்ளது.

ஒரு குண்டுத்தாக்குதலினால் ஏற்பட்ட அதிவ்வு என்பதற்கும் அப்பால், ஒரு தாக்குதலில் காயப்பட்டவர்கள் அந்த வான்கலங்களின் சப்தத்தினாலேயே மிகுந்த உளவியல் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். ஏற்கனவே சிறிய வெட்டுக்கள் மற்றும் கீறல்களினால் பயமூட்டப்பட்டவர்கள், தோல், தசையற்ற எலும்புகள் அல்லது நரம்புகளில் ஏற்படும் வெட்டுக்களால் ஏற்படும் இரத்தப்போக்கு ஆகியவற்றைப் பார்ப்பதால் மேலும் உளவியல் தாக்கத்துக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களின் பொதுவான சிந்தனைத் தடங்கள் பின்வருமாறுஹ

- சிறிய அல்லது பாரிய காயம் ஏற்பட்டாலும் அவர்களுக்க இறப்பு தொடர்பான பயம் ஏற்படுகின்றது.
- நண்பர்கள் மற்றும் குடும்பங்கள் தங்களின் கண்களின் முன்னால் அழிக்கப்படுவதையோ பயமுறுத்தப்படுவதினால் அனுபவிக்கும் அதிர்ச்சி
- அங்கவீனப்படுத்தப்படுவதினால் தங்கள் குடும்பத்திற்குத் தாங்கள் பயனற்றவர்களாகி விட்டார்கள் என்ற காரணத்தினாலும் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை
- வீட்டை, சொத்துக்களை, குடும்பங்களை இழந்ததனால் ஏற்பட்ட உணர்வு மேலோங்குதல்

குண்டுத் தாக்குதல் விமானங்களின் எதிர்பாராத ஒரு தன்மை பாரிய உளவியல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. அதன் விளைவாக, அப்படியான நேரங்களில் தப்பியவர்கள் அதையிட்டு அழுத்தம் அடைந்தவர்களாய் மிகவும் உணர்வு மேலோங்கிக் காணப்படுவார்கள். முடிவெடுக்க இயலாத நிலையில் தங்கள் சுய நினைவை இழந்த செயற்பாட்டில் ஈடுபடுவார்கள். இத்தகைய ஒரு பயங்கரமான விபரீதத்தினை மறக்க இயலாமல், அந்த சம்பவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை றெஜினால்ட் – சில வார்த்தைகள்...

செஞ்சோலை வளாகத்தில் சிறீலங்காவின் வான் படைக்குச் சொந்தமான கிபீர் விமானங்கள் குண்டு வீசித் தாக்கி ஒருவருடம் நிறைவடைந்து விட்டது. இந்த சமயத்தில் இத் தாக்குதலில் சாவைத் தழுவிக்கொண்ட, தங்கள் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துக் கொண்டிருந்த அந்த ஐம்பத்தி– மூன்று இளம் பள்ளி மாணவிகளையும் அவர்களுடன் கொல்லப்பட்ட பணியாளர்களையும் நான் நினைவு கூர்ந்து கொள்கின்றேன்.

இந்தச் சம்பவம் எங்கள் மனங்களில் ஆறாத வடுக்களாக இடம் எடுத்துவிட் டது. இந்தச் சம்பவத்தின்போது 53 பள்ளி மாணவிகள் கொல்லப்பட, நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்தவர்களில் மூவர் கால்களில் ஒன்றை இழக்க, ஒருவர் தனது கண்களில் ஒன்றை இழந்தார்.

எங்களின் இருபதாண்டு காலம் நீண்டுள்ள இனப்போரின்போது பல தடைவ கள் மக்களின் வாழ்விடங்கள் வான் தாக்குதலின் இலக்குகளாகயிருப்பி னும், இத்தகைய வான் தாக்தல்கள் எங்கள் மக்களின் உளவியலில் ஏற்படுத்தும் தாக் கங்கள் ஒப்பிட முடியாதவை. இந்தத் தாக்குதலின் போது செஞ்சோலை வளாகத்தில் ஐ நூறு வரையிலான மாணவிகள் இருந்தனர்.

பாரிய எண்ணிக்கையில் தாங்கள் மற்றைய மாணவிகளுடன் இணைந்திருந்த தையிட்டு அவர்கள் மிகவும் குதூகலம் அடைந்திருந்தனர். அவர்கள் சிறிதளவும் எதிர் பார்த்திராத வேளையில் இந்த தாக்குதல் அவர்கள் மீது நடாத்தப்பட்டுள்ளது. இத னால் இதில் தப்பியவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவத்தினால் ஆழ மான உளவியல் பாதிப்புக்கு ஆழாகி உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மேலும், கிபீர் விமானங்கள் தொடர்ச்சியாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள வெவ்வேறு இலக்குகளைத் தாக்குவதனால், அவர்களால் இந்த மன வலியில் இருந்து மீண்டு வர இயலாத தன்மையும் உள்ளது. ஒவ்வொரு முறை வன்னி வான்பரப்பில் கிபீர் அல்லது மிக் தாக்குதல் விமானங்கள் வரும்போதும் அவர்கள் அந்த மன வலியை மீள அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். செஞ்சோலையில் மேற்கொள்ளப் பட்ட குண்டு வீச்சுத் தாக்குதல்கள் அதில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பள்ளி மாண வர்களை மட்டமல்லாமல், வன்னிப் பிரதேசத்தில் வாழும் அனைத்துக் குழந்தைகளின் மனதிலும் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது முக்கியமாகக் கூறப்பட வேண்டும்.

வன்னி வான்பரப்பில் கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் நுழைந்த மறுகணமே பள்ளிக் குழந்தைகள் பயத்தில் கதறுவது என்பது வன்னியில் தற்போது பொதுவாகக் காணப்படும் ஒரு விடயம். செஞ்சோலை வளாகத்தில் குழந்தைகள் மீது மேற்கொள் ளப்பட்ட வான் தாக்குதல் வன்னிச் சிறார்களின் கல்வியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வன்னி வான்பரப்பில் கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் வரும்போ தெல்லாம் தங்களுடைய வழமையான கற்பித்தல் செயற்பாடுகளைச் செய்ய இயலாத நிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த துன்பியல் நிகழ்வில் உயிர்தப்பிய பல மாணவிகளுடன் பணியாற்றும் சந்தர்ப்பம் எங்களுடைய நிறுவனத்துக்கு இருந்தபடியால், அவர்களின் மேல் இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட ஆழமான தாக்கம் மற்றும் அது அவர்களின் உளவியலை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்பதையும் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது. இந்தத் துன்பியல் நிகழ்வில் உயிர் தப்பிய கூடுதலான சிறுவர்கள் *PTSD* என அழைக்கப்படும் ஒரு துன்பியல் நிகழ்வுக்குப் பின்னரான மன அழுத்த நோயின் அறிகுறிகளையே வெளிக்காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செஞ்சோலை வான் தாக்குதல் ஏற்பட்டு முதலாம் ஆண்டு நிறைவடையும் இந்த நேரத்தில், அதில் கொல்லப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கு அவர்களின் அன்புக்குரிய குழந்தைகள் இறந்ததையிட்டு எங்களின் ஆழ்ந்த கவலையையும் அவர்களின் மன வலியில் நாங்களும் பங்கெடுத்துக் கொள்கின்றோம் என்ற செய்தியையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மற்றும், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய சிறார்களுக்கு, நாங்கள் எங்கள் உளவியல் ஆதரவு ஆலோசனைப் பணியின் மூலம் உங்களுடன் உங்கள் வளமான வாழ்வை நோக்கி நாங்கள் என்றென்றும் பயணிப்போம் என்று கூறிக்கொள்ளவும் விரும்புகின்றேன்.

அத்துடன் ஒரு அமைதியான சூழ்நிலையை எங்கள் பிரதேசத்தில் உருவாக்கி எங்கள் சமூகத்தின் நாளைய தலைவர்களான எங்கள் சிறார்களின் கல்விச் செயற்பாடுகள் அமைதியான சூழலில் நடைபெற அவர்களுக்கு வளமான எதிர்காலத்தை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒரு பணிவான வேண்டுகோளை முன் வைக்க விரும்புகின்றேன்.

**எஸ். எட்மண்ட் றெஜினால்ட் *OMI, MS.*,**
**ஒருங்கிணைப்பாளர்,**
**அன்னை இல்லம் – மன நல ஆலோசனை மற்றும் உளவியல் கல்விக்கான அமைப்பு,**
**87 கனகாம்பிகைக்குளம்**
**கிளிநொச்சி, சிறீலங்கா**

*அருட்தந்தை றெஜினால்ட் முஆஜ அவர்கள் மரிலாந்து, ஐக்கிய அமெரிக்காவில் உள்ள லொயலா கல்லூரியின் உளவியல் ஆலோசனைத் துறையில் உளவியல் ஆலோசனையில் உயர்நிலைப்பட்டப் படிப்பை மே மாதம் 1999 ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4



# சூழலில் ஏற்படும் தாக்கங்கள்

தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல், போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரம், இயற்கை அழிவுகள் மற்றும் அடிக்கடி இடம்பெறும் இடப்பெயர்வு ஆகிய னவற்றில், எப்பொழுதும் தமிழர்களுக்குத் தன்னுடைய ஆதரவை வழங்கி வருவது அவர்களின் சூழலே ஆகும். தமிழர்கள் தங்க ளுக்கு ஒரு புதிய வாழ்வைத் தொடங்கி அவர்கள் எங்கு சென்றாலும் அங்கு நிலையாக தங்களுக்குத் தங்குமிடங்களை அமைத்து வாழ்வதற்கு தாயகத்தின் சூழல் எப்பொழுதும் துணையாகவே இருந்துள்ளது. வீடமைப்பு, உணவு, வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் சூழலே அவர்களுக்கு வழங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் வீழ்ச்சி

குண்டுகளின் இரசாயன உருவாக்கம் என்பது வெளிப்படுத்தப்படா விட்டாலும், அதனால் வரும் பாதிப்பை நாம் உதாசீனப்படுத்திவிட முடி யாது. பயன்படுத்தப்படும் குண்டுகள் வேறுபடலாம். பொதுவாக "டிலே" என்றழைக்கப்படும் குண்டுகளும் "எயர் சொட்" என்றழைக்கப்படும் குண் டுகளும் பயன்படுத்தப்படுகின்றது. டிலே அல்லது தாமதம் என்ற ழைக்கப்படும் குண்டுகள் தரையுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டவுடன் வெடித்து நிலத்தில் ஒரு பாரிய வெடிப்பை இட்டுச் செல்லும்.









எயர் சொட்ஸ் அல்லது வான் சிதறல் குண்டுகள் என்றழைக்கப்படும் குண்டு தரையில் இருந்து ஐம்பது மீட்டர்கள் உயரத்தில் வெடிக்கும். குண்டுச் சிதறல்கள் ஒரு பாரிய சுற்றளவுக்கு பரப்பப்படுவதால் வான் சிதறல்களின் போது இலக்குப் பிரதேசம் பெரிதாகவும் ஒன்றிணைந்த சேதம், அதிக மாகவும் இருக்கும். மாறாக, தாமதக் குண்டுகள் (டிலே) நிலத்தில் அது விழும் இடத்தில் உள்ள மரங்களின் வேர்கள் மற்றும் வீடுகளின் அடித்தளங் கள் உட்பட அனைத்தையும் தோண்டி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதக் குண்டுகளின் தாக்குதல்களால் ஏற்படுத்தப்படும் நில வெடிப்புகள் ஒரு இயற்கை அம்சத்தின் அழகை அழிப்பதோடு, குண்டுகளிலிருந்த இரசாயனத்தினைக் கொண்டிருக்கும் ஒரு குழியையும் உருவாக்குகின்றது. மாறாக வான் சிதறல் தாக்குதலின் போது அந்தக் குண்டு வெடிப்பதைத் தடுப்பதற்கான இறுக்கமான தரை இல்லாததனால் அதன் வேகம், மற்றும் வெடிப்பு மற்றும் அதிர்வு சக்தி ஆகியன மட்டுப்படுத்தப் படுவதில்லை. ஒரு தாமதக் குண்டு வெடிப்பின்போது தரை அந்த குண்டினால் ஏற்படும் அதிர்வையும் வெடிச்சத்தத்தையும் உள்வாங்கும். ஆனால் வான் சிதறல் தாக்குதல்களின் போது குண்டுகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் எந்தவிதத் தடையும் இன்றி நடு வானில் அவை வெடிக்கும்.

குண்டின் உடைந்த பாகங்கள் வானில் மிகக்குறைந்த தடையுடனும் பாரிய வேகத்துடனும் பயணிக்கக் கூடியதாய் இருக்கும். இந்தக் காரணத்தினால், பாரிய எண்ணிக்கையிலான உயர்வான மரங்கள் நிறைந்த அடர்ந்த காட்டுப் பிரதேசங்களில் வான் சிதறல் தாக்குதல்கள் கூடியளவு பயன்படுத்தப்படும். இதனால் குண்டின் துண்டுகள் மரங்களின் கிளைகளையும் ஏனைய பகுதிகளையும் வெட்டியபடியும் தடிகளையும், இலைகளையும் எரித்தபடியும் செல்லும். தாமதக் குண்டுகளின் அதிர்வினாலும் நடுக்கத்தினாலும் மரங்கள் தங்கள் இலைகளை முழுமையாக இழக்கும். கீழே உள்ள தரை பச்சை இலைகளால் நிரம்பப்பட, மரங்களின் கொப்புக்கள் மட்டும் வெறுமையாக நிற்கும். வான் சிதறல் தாக்குதல்களும், தாமதத் தாக்குதல்களும் அது தாக்கும் காட்டினதோ அல்லது வயல் வெளியினதோ ஒரு குறிப்பிட்ட குறுக்களவில் உள்ள அனைத்து மரங்களையும் அகற்றி வெட்டையாக்கி விடக்கூடியவை.

இந்த வயல் வெளிகள் தான் வடக்குக் கிழக்கின் தங்கச் சுரங்கங்கள் போன்றவை. இவற்றுக்கு ஏற்படும் அழிவும் சேதமும் ஒரு பொருளாதார தாக்கத்தை ஒத்த சுற்றுப்புறச் சூழல் தாக்கத்தையும் ஏற்படுத்தும். ஒரு வருடத்துக்குப் பெறுமதியான பயிர்கள் அழிந்து போய்விட்டன என்பதற்கும் அப்பால், மிகவும் கவனமான முறையில் விவசாயிகளால் பராமரிக்கப்பட்டு வரும் அந்த நிலங்கள் ஒரு வான் தக்குதலுக்கு உட்பட்ட பின்னர் பயிர்செய்கைக்கு உகந்ததற்றதாகி விடும். ஒரு குண்டின் சரியான இரசாயன அடக்கம் தெரியப்படாவிட்டாலும், ஒரு தாக்குதலினால் சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாசு அந்த விவசாய நிலத்தை சேதமாக்கப் போதுமானது. எனவே அது மீண்டும் விவசாய நிலமாக மாற்றம் அடைவதற்கு நீண்ட கால கவனிப்பும் உழுதலும் தேவைப்படும்.

இது இப்படியிருக்க, பல வருட கால இனப்போர் இயற்கையையும் அதில் வாழும் தாவர விலங்கினங்களையும் பெரியளவில் பாதிக்கின்றன. வடக்கு கிழக்கில் சுற் றுப் புறச் சூழலில் ஏற்படும் சேதத்துக்கு வான் தாக்குதல் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது. 1982 ஆம் ஆண்டு, மன்னால் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி அதன் காடுகளில் 1800 யானைகள் வரையில் இருந்ததெனக் கண்டறியப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் 1996 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அதே போன்ற ஆய்வின் போது அதே பிரதேசத்தில் இந்தத் தொகை இருநூறிலிருந்து முந்நூறுக்கு வீழ்ச்சி அடைந்தது. அவற்றில் முப்பது வீதமானவை காயமுற்றோ வருத்தமுற்றோ இருந்தன. இந்த தெற்காசிய விலங்குகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சிக்கு போர் ஒரு முக்கிய காரணமாகக் கொள்ளப்பட்டது.

வான் தாக்குதல்களே கூடிய இழப்பை ஏற்படுத்துவதெனவும் தீவிரமானதென வும் வடக்கு கிழக்கில் உள்ள சில சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பாளர்கள் நம்புகின்றனர். அணு உயிரினங்கள் தொடக்கம் பாரிய உயிரினங்கள் வரை அனைத்தும் இத்தகைய கொடூரமான தாக்குதல்களினால் பெரிய அளிவில் பாதிக்கப்படுகின்றன என நம்பப்படு கின்றது. மணவாளன் பட்டமுறிப்பு காட்டுப் பிரதேசத்தில் ஒரு ஏரிக்கு அருகில் 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு வான் தாக்குதல் ஏற்பட்டது. இதன் விளைவாக ஒரு ஆண் யானை அழிக்கப்பட பல யானைகள் காயப்பட்டன. அந்தப் பிரதேசத்தில் உள்ள காட்டு அதிகாரி ஒருவர் கூறுகையில் "காயப்பட்ட யானைகள் உடல்களில் இரத்தம் ஓட, வெறி பிடித்தப்படி ஓடியதை மறக்க இயலாது" எனக் குறிப்பிடுகின்றார்.

இந்த சம்பவம் தவிர்ந்து கேப்பாப்பிலவு மற்றம் மாங்குளம் தாக்குதல்களின் போதும், விலங்குகளின் இறப்புத் தொடர்பாகப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கேப் பாப்பிலவில் பல வளர்ப்புப் பிராணிகள் கொரூரமாகக் கொல்லப்பட்டதோடு மாங்குளத் தில் வான் தாக்குதல்களினால் பாரிய எண்ணிக்கையில் காளை மாடுகள் கொல்லப்பட் டன. இப்படியான வளர்ப்புப் பிராணிகளின் உயர்ந்த எண்ணிக்கை இறப்புக்களினால் வடக்குக் கிழக்கின் சுற்றுப் புறச் சூழலின் உயிரியல் சமன்பாடு வெகுவாகப் பாதிக்கப்ப டுகின்றது.


விலங்குகளுக்கு ஆபத்து வர முன்னர் அதனை அறிந்து கொள்ளும் விசேட திறன் உள்ளது என்பது விலங்குகளின் ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிட்ட அதே காட்டு அதிகாரி மேலுமொரு விடயத்தைக் குறிப்பிட்டார். அதாவது, பல காட்டு உயிரினங்கள் அந்தப் பிரதேசத்தில் ஒரு தாக்குதலின் முன்னர் வித்தியாச மான இயல்புகளை வெளிக் காட்டியதாகவும் குரங்குகள் அந்தக் குழப்பத்தின் போது பீதியடைந்த ஒரு சுபாவத்தை வெளிக்காட்டியதாகவும் குறிப்பிட்டார்.

மரங்கள், உயிரினங்கள், தாவரங்கள், நீரினங்கள் ஆகியவையின் அழிவு சுற்றுப் புறச் சூழலில் உயிரியலில் உள்ள சமன்பாட்டில் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும். குண்டுச் சிதறலினால் வெட்டப்பட்ட ஒரு பனைமரத்தினதும், தென்னைமரத்தின தும் மேற்பகுதியைப் பார்க்கும்போது அந்தத் தாக்கம் மிகுந்த சோகமான முறையில் வெளிக்காட்டப்படுகின்றது. இருபது வருடங்களுக்கு மேல் வளர்ந்து அந்த உய ரத்தை அடைந்து, மக்களுக்கு ஒரு முக்கிய பயன்பாட்டை வழங்கிக் கொண்டிருக் கும் இந்த மரங்களை அழிப்பது உளவியல், பொருளாதார ரீதியில் மட்டுமல்லாது சுற் றுப்புறச் சூழலிலும் பெரிய பின்னடைவை உருவாக்குகின்றது. எமது பிற்கால சந்ததி யினரின் நலத்தைப் பேண நாம் சுற்றுப் புறச் சூழலைத் தக்க வைப்பதில் இத்தகைய அழிவுகள் தடையிடும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









5

# கல்வியில் ஏற்படும் தாக்கங்கள்

"முதலில் நீ படித்து நல்ல மதிப்பெண்களை எடு. அதன் பின்னர் உனக்கு வாழ்க்கையில் எது தேவையோ அது அனைத்தும் உனக்குக் கிடைக்கும்." "படித்திருந்தால் தான் மக்கள் உன்னை மதிப்பார்கள், இந்த உலகத்தில் முன்னேற உனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்." இதுவே இந்தப் பிரதேசங்களில் உள்ள பள்ளி மாணவர்களிற்கு, பெற்றோர்கள் வழங்கும் வேத மந்திரம்.

வாழ்வு எந்தளவு சீரற்றுப் போனாலும், கடினமான நேரங்கள் வந்தாலும், தங்கள் குழந்தைகளுக்கு ஒரு தரமான வாழ்வை வழங்க வேண்டும் என்பதே தமிழர்களின் அசையாத நம்பிக்கையாகவும் அதற்குரிய விடாமுயற்சியும் வெளிப்படுத்தி நின்றது.

தமிழர்களின் மனதில், கல்வி என்பது வாழ்வின் மேம்பாட்டுக்கு மிக அத்தியாவசிய மானதாகக் கருதப்பட்டது. எந்த வகைக் கடினங்கள் ஏற்பட்டாலும், அனைத்துத் தடைகளையும் தாண்டி தங்கள் குழந்தைகளுக்கு நல்ல கல்வியை வழங்க தமிழர்கள் போராடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்விக்குறியான எதிர்காலம்

தங்களுக்கு ஒரு உறைவிடம் இல்லாவிடினும், ஒரு வேளை உணவு இல்லாவிடினும் கல்வி என்பது பல வீடுகளில் முக்கியப்படுத்தப்பட்டது. பல வீடகள், தாங்கள் எத்தகைய துன்பங்களைத் தாங்கிக் கொண்டாலும், தங்கள் குழந்தைகளை குடும்பத்தின் எதிர்கால நலன்கருதி பல கிலோமீட்டர்கள் தொலைவில் கல்வியைத் தொடர அனுப்பி வைத்தார்கள்.


இந்தப் பொதுநலன் வான் தாக்குதல்களின் இலக்காக மாறிவிட்டது என்பதே ஒரு கசப்பான உண்மையாகும். ஆகஸ்ட் 14, 2006 அன்று நடைபெற்ற செஞ்சோலைக் குண்டுத் தாக்குதலின்போதும் அதன் பின்னரான சுண்டிக்குளப் பள்ளிக்கூடத்தின் மீதான தாக்குதலின்போதும் மாணவர்கள் குண்டுத்தாக்குதல்களை குறுகிய தூரத்தில் சந்தித்துள்ளார்கள். இந்த கல்விச் சமூகம் தற்போதைய போர்முறையின் இலக்குகளாக மாறிவிட்டன.

ஆகஸ்ட் 14 தாக்குதலின் பின்னர், கிபீர், மிக், வேவு விமானங்கள் வான் பரப்பில் வட்டமிட்டால் பள்ளி இடம்பெறாது என்றே கொள்ளக் கூடியதாக இருக்கும். இதன் காரணமாக, சீரற்ற மாணவர் வருகை, கல்வயை இடைநிறுத்துதல் ஆகியவை அதிகரித்துள்ளன. ஆசிரியர்கள் அல்லது மாணவர்கள் வருகை தராமல் இருத்தல், சீரற்ற வகுப்புக்கள் ஆகியவை கற்றலிலும் தேவையான பாடத்திட்டத்தைப் படித்ததிலும் இடையூறுகளை விளைவித்துள்ளன.வளர்ச்சியடைந்து வரும் நாடான சிறீலங்கா ஏற்கனவே கல்வி மட்டத்தில் பின்னிற்கின்றது. இது குறிப்பாக, இனப்போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் அதிகம் காணப்படுகின்றது. கல்வியின் தரம் திருப்திகரமாக இருக்காவிடினும் உலகமயமாக்கலின் சமநிலைக்கு தன்னுடைய மாணவ சமுதாயத்தை கொண்டு வரும் அளவுக்கு இந்த நாடு வளர்ச்சி அடையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினிகள் மிகவும் அரிதாகவே பயன்பாட்டில் உள்ள வடக்கு கிழக்குப் பிர தேசங்களில் இந்த உண்மை இன்னமும் பூதாகரமாக வெளிப்படுத்தப்படுகின்றது. போர்நிறுத்த காலத்தின் போது, வடக்கு கிழக்கில் உள்ள மாணவர்களுக்கு நிலை யான கல்வி நிலையும் கல்வி வளங்களும் ஓரளவு பெறக்கூடிய நிலைக்கு மாறிக் கொண்டிருந்தது. இருப்பினும், மீண்டும் போர் மூழும் தற்போதைய நிலையிலும், வான் தாக்குதல்களின் தீவிரத்தன்மையினாலும், இப்படியான மேம்பாடுகள் மெது வாக குறைந்து போகின்றன.



போர் மீள ஆரம்பித்ததனால், தமிழர்கள் மீண்டும் தங்கள் நிரந்தர வீடுகளில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான பிரதேசங்களை நோக்கி நகர ஆரம்பித்தனர். பாரிய வான் தாக் குதல் நடக்கும் பிரதேசங்களான வாகரை, மூ தூர், வேணாவில், பளை, இலுப்பக்கடவை, மற் றும் அளம்பில் ஆகிய இடங்களில் இருந்து மக் கள் இடம்பெயர்ந்து அமைதியான இடங்களை வேண்டி நின்றனர்.

இந்த உள்நாட்டு இடப்பெயர்வு சிறுவர் களை அவர்களின் புதிய சூழலிலும் பள்ளியிலும் புதியவர்களாக மாற்றியது. இந்த வழமைக்கு மாறான ஒரு மாற்றம் அவர்களின் மனதில் மாற் றத்தை ஏற்படுத்துவதோடு, பள்ள வேலையில் சிந்தனையை ஒருங்கிணைக்க இயலாத மனநி லையையும் உருவாக்கும். முல்லைத்தீவு மற் றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பள்ளி செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையில் ஒரு முக்கிய மாற்றம் நடைபெற்றுள்ளது.

நெடுஞ்சாலையை மூடியதன் பின்னர் இந்த மாவட்டத்தின் பள்ளிகள், வளங்களும் ஆசிரியர்களும் குறைந்த நிலையிலேயே செயற்பட்டுக் கொண்டிருந் தனர். மிகவும் தளர்வான ஒரு கல்வி நிலைளை மேலும் மோசடையச் செய்வது போல் இந்த உள்நாட்டு இடப்பெயர்வு இருந்தது. நேரத்திட்டம், வரவு செல்வு மற்றும் இட ஒதுக்கீடு ஆகியவற்றில் பள்ளிகள் மிகுந்த இறுக்கத்தைக் கடைபிடிக் கின்றனர். இருக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒரு மாணவனுக்குத் தேவையான கவனத்தை வழங்குவது கடினம் என்பதைக் கண்டறிந்ததினால் மதிப்பெண்கள் வீழ்ச்சி அடைந்துள்ளது. மதிப்பெண்களின் வீழ்ச்சி என்பதற்கு அப்பால், இந்த ஒரு கடினமான சூழ்நிலைக்கு ஈடு கொடுக்கும் வழிமுறையாக பள்ளியை விட்டு நிற் கும் ஒரு முடிவையும் மாணவர்கள் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வுகள் ஒரு பக்கமிருக்க, வான் தாக்குதல்கள் இளைஞசர்களின் நலன் மற்றும் இளம்பிராயம் ஆகியவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. குண்டு வீச்சு விமானங்களின் சப்தங்கள் அவற்றின் அழிவுச் செயற்பாடுகள் போன்றவற்றால் சிறுவர்கள் மத்தியில் குறிப்பிடக் கூடிய அளவு பயம், அதிர்ச்சி மற்றும் மேலோங்கிய உணர்வு வெளிக்காட்டப்படுகின்றது. பயத்தினால் பல மாணவர்கள் முழுமையாக பள்ளி செல்வதை நிறுத்தியுள்ளார்கள். சில தடவைகளில், ஒரு வான் தாக்குதலினால் ஒரு குடும்பத்தில் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்குலைவினால் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்த வேண்டிய கட்டாயத்துக்கும் ஆளாகின்றனர். கிபீர, மிக் மற்றும் வேவு விமானங்களின் பயம், வடக்கு கிழக்கில் பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்களின் நேரம் தவறாமையையும் பாதித்து உள்ளது.

அவர்களின் சப்தத்தினால் மட்டுமே பயத்தினை ஊட்டக்கூடிய விசேட திறன் கொண்ட பயங்கரங்களாக இவை உள்ளன. பல மாணவர்கள பள்ளிக்குச் செல்வதையோ பாடத்துக்குச் செல்வதையோ பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நிறுத்தி உள்ளனர். இதன் காரணமாக பாடங்கள் விரைவாகவும், குறுகியதாகவும், கட்டாயமானதாகவும் உள்ளவாறான திட்டமிடல் தேவைப்படுகின்றன. பாடங்கள் விளங்குவதற்கு ஏற்றதாக உள்ளனவா, குறுகிய நேரத்தில் வேகமாகச் செய்வதனால் அவற்றை மாணவர்கள் பின்தொடர்கிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றது. பல மணி நேரக் கடின உழைப்பு கற்றல் சீராக நடைபெறுவதற்கு போடப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் வருகையில் உள்ள குறைபாடு, நேரம் கடைப்பிடிக்க இயலாமை ஆகியவற்றினால் பாடத்திட்டங்களும் பாடங்களும் இத்தகைய ஒரு சூழலுக்கு ஏற்ற வாறு மாணவர்களுக்கு மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இருப்பினும் வகுப்பு நேரத்தின் போதாத்தன்மையை கருத்தில் கொண்டு வகுப்பின் தரத்தில் எந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது பாடங்களையும் பாடத்திட்டங்களையும் கண்டிப் பாகப் பின்பற்ற வேண்டும். தவறவிடப்பட்ட வகுப்பு நேரங்களை ஈடு செய்ய, ஆசிரியர்கள் தங்கள் பாடங்களை விரைவான முறையில் நடத்தி பாடத்திட்டதின் தரத்தைத் தக்க வைக்க முயல்கின்றனர். இந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கல்வித் துறை, மாணவர்களுக்கு மேலதிக உதவிகள் மற்றும் கவனத்தை செலுத்தி, பாடத்தை முழு மையாக வழங்க முற்படுகின்றனர். வான்கலன்களின் பறப்புக்களினால் தவறவிடப் பட்ட வகுப்புக்களுக்கு ஈடு செய்ய சில பாடசாலைகள் மாலை நேர வகுப்புக்களையும் நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

குண்டு வீச்சு விமானங்களின் உண்மையான தாக்கத்துக்கு அப்பால், இந்த வன்முறையில் இருந்து பாதுகாப்பு எடுப்பதற்காக எடுக்கப்பட்ட பாதுகாப்பு செயற்பா டுகளும் கல்வியில் ஒரு பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. வான் தாக்குதல்கள் தாக்குதல்கள் அதிகரிக்கத் தொடங்க ஆரம்பித்த போது, அனைத்து பள்ளிகளும் பதுங்குகுழிகள் அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

உயர்நிலை மாணவர்கள், சிறுவயது மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பள்ளி நிர்வாகத்தினர் இணைந்து மண்வெட்டிகளைக் கொண்டு வான் தாக்குதலினால் இருந்து பாதுகாக்கும் இடங்களை உருவாக்கினார்கள். பார்ய எண்ணிக்கையான மாண வர்களுக்கு இந்தப் பணியைச் செய்து முடிக்க பதினைந்திலிருந்து முப்பது நாட்கள் வரை எடுத்தது.




| | None | Minimum | Moderate | Significant | Maximum |
|---|---|---|---|---|---|
| Number of Students | 10 | 31 | 79 | 24 | 39 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இது இவ்வாறிருக்க, பாரிய மழையின் பின்னர் இந்த பதுங்குகுழிகள் பாவனைக்கு உகந்ததற்றதாக மாறி தங்கள் நோக்கத்தைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டன. அதன் தொடர்ச்சியாக மேலும் ஒரு பத்திலிருந்து பதினைந்து நாட்கள் வரை எடுத்து பாதுகாப் பான தங்குமிடங்களை அமைக்க வேண்டிய தேவை எழுகின்றது. அத்தோடு, இந்த நாட்களின் போது தவறவிடப்பட்ட பாடங்களுக்கு ஈடுகட்ட, மாலை நேர வகுப்புக்களும் உருவாக்கப்படுகின்றன. குண்டுவீச்சு விமானங்கள் தொடர்பான பயம் மட்டுமெ பல சிறு வர்களின் கல்வியில் ஒருங்கிணைந்த சேதத்தை உண்டு பண்ணும். அதன் சப்தம் மாண வர்களின் சிந்தனையையும், எண்ணத்தையும் சிதறடிக்கும். அது வந்தடைந்ததும், அவர் கள் தங்கள் படிப்பில் கவனத்தை முழுமையாக இழந்து நடுங்கத் தொடங்குவதோடு குண்டுகள் தொடர்பான பீதி அவர்களை முழுமையாக ஆட்கொள்ளும். சாதாரண தர மற்றும் உயர் தர மணாவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு ஒன்றின் போது வான் தாக்குதல்களால் ஏற்படும் தாக்கங்கள் அடையானம் காணப்பட்டன. மேலே குறிப்பீடப் பட்டுள்ளது போன்று, கணிப்பீடு எடுக்கப்பட்ட 183 பேரில் 142 பேரி வான் தாக்குதல்களி னால் தங்கள் கல்வியில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டனர்.

கல்வி என்பது இளைஞர்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் அடிப்படை என்ப தோடு நாளைய தலைவர்களை உருவாக்கி நாட்டை மேம்படுத்ததுவதற்கும் இன்றியமை யாதது. தமிழ் சிறுவர்களின் கல்வி பாதிக்கப்படும்போதும், துன்பியல் சம்பவங்கள் நிரம்பிய வாழ்வை வாழும்போதம், இவர்கள் தனிமையை நாடுவதற்காக பிழையான திசைகளில் தங்கள் மனங்களைத் திருப்பக்கூடும். உளவியல் பாதிப்புக்கள் நிறைந்த வாழ்வை வாழும் மாணவர்களுக்கு சரியான திசையில் அவர்களை வழிகாட்டுவதற்கு கல்வி மிகவும் அத்தி யாவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிபீர் வரும்போது...

விசுவமடு பிரதேசத்தில் உள்ள சாதாரண் தர மற்றும் உயர்தர மாணவர் களின் கருத்துப்படிஹ

குண்டு வீச்சு விமானங்களின் வருகையின்போது உங்களின் செயற்பாடு எவ்வாறு இருக்கும், இது எறந்த வகையான தாக்கங்களை உங்களில் ஏற்படுத் துகின்றது?

- நாங்கள் படிக்கும் போத கிபீர வந்தால், பாடங்கள் நிறுத்தப்படும், நாங் கள் தொடர்ந்து பயத்தில் நடுங்கிக் கொண்டிருப்போம். அமுதா ஜீவானந் தம் பயத்தினால் என்னால் பாடத்தில் சிந்தனையைச் செலுத்த இயலாம் இருக்கும்

  – அ.சாந்தி

- சப்தம் எங்கள் செவிப்புலனை மழுங்கடித்து சிந்தனையைக் குலைக்க பயம் எங்கள் மனங்களை ஆட்கொள்ளம். எங்களுக்கான பயம் என்பதோடு, எங்கள் குடும்பங்களுக்காகவும் நான் பயப்படவேண்டிய தேவை உள் ளது.

  – வ. கீரத்திகா

- குண்டு வீச்சு விமானங்கள் பாடத்தைக் குழப்புவதோடு, இதனால் எங்கள் வகுப்புக்கள் சீரற்று நடக்கின்றன.

  – க. சுபேந்திரன்

- கிபீர் வந்தால், எங்கள் சிந்தனையை நாங்கள் சிதற வீட்டு விடு வோம், இதனால் பாட நேரம் வீணடிக்கப்படுகின்றது. இந்த நேரங்களில் பாடங்களை நான் புரிந்து கொள்ள இயலாமல் இருக்கும்

  – அ. சாம் துசாந்தன்

- அதிகாலையில் வேவு விமானங்களும், கிபீர்களும் வனத்தை வட்டமிட் டால் எங்களி பெற்றோர் தாக்குதலுக்குப் பயந்து எங்களை பள்ளிக்கூடத் துக்கு அனுப்புவதில்லை. தாக்குதல்களின் பயத்தினால் நாங்களும் இந்த விடயத்தில் எங்கள் பெற்றோரை எதிரபதில்லை. நாங்கள் பள் ளிக்கூடத்திற்குச் செல்லும் நாட்களில், நாளின் பெரும்பாதியை பதுங்கு குழிகளில் செலவழிப்போம்.

  – க. நிரோசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் பார்வை

கே. இரட்ணகுமார்
அதிபர்
கிளிநொச்சி மத்திய கல்லூரி
கிளநொச்சி

மாயவர்கள் இநத பயங்கரத்தினால் உண்மையில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் குண்டு வீச்சு விமானங்கள் வந்தவுடன் ஆசிரியர்களும் சக பணியார்களும் செயலிழந்து போய் விடுவார்கள். சில சமயங்கள் சிறுவர்கள் பயத்தினால் சலமிருந்த சம்பவங்கள் கூட நிகழ்ந்துள்ளன. வாகனங்கள் விதிமுறைகள், ஆசிரியர்கள் ஆகியவற்றைப் பெற்றுப்படுத்தாது எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல் அவர்கள் வெறிபிடித்தது போல் ஓடுவார்கள்.

ஏ9 நெடுஞ்சாலை மூடப்பட்டதன் பின்னர், ஒரு பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி கல்வியிலும் பாடசாலைகளின் பாடத்திட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பள்ளி உபகரணங்கள் மற்றம் பொருட்கள் ஆகியவற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலை பாதை மூடப்பட்டதனால் ஏற்பட்டுள்ளது. இது தவிர, பாடசாலை ஆசிரியர்களுக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேறு நேரங்களில் நாங்கள் இநத தட்டுப்பாட்டை மாணவர்களின் எண்ணிக்கையை வகுப்பறைகளில் அதிகரித்தோ அல்லது வேறு ஏதோ ஒரு வகையில் ஈடு செய்து இருப்போம்.

ஆனால் இப்பொழுது உள்நாட்டு இடம்பெயர்வினால் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. பொருளாதாரத் தடையினால் பல மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து உள்ளார்கள். மேலும் பலர் பாதுகாப்புத் தேடி போர் வலயங்களில் இருந்தும் வந்துள்ளனர். உள்நாட்டு இடப்பெயர்வுக்கு ஒரு முக்கிய காரணமாக வான் தாக்குதல்கள் உள்ளன. இவர்களில் கூடுதலானவர்கள் வன்னிப் பிரதேசத்தின் இதயநாடியாக விழங்கும் கிளிநொச்சி மாவட்டதிற்கு புகலிடம் கோரி வந்துள்ளார்கள்.

உள்நாட்டு இடப்பெயர்வு மற்றம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஆகியவை ஏற்கனவே தளர்வான நிலையில் உள்ள கல்வி அமைப்பில மேலும் அழுத்தங்களை அதிகரித்ளதுள்ளன. நாங்கள் மாற்றங்கள் இல்லாமல் எங்கள் பாடத்திட்டத்தை அப்படியே நடாத் இயலாது. முன்னரே குறிப்பிட்டப்பட்ட நேர அட்டவணையின்படி தேர்வுகளையோ பாடங்களையோ கொண்டு செல்ல முடியாது . குண்டு வீச்சு விமானங்கள் மற்றம் வேவு விமானங்களினால் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே பள்ளிக்கு வருகின்றார்கள், அதனால் எதையுமே திட்டமிட்டு செய்யயியலாது. பாடத்திட்டததை பின்தொடர்வது இன்னமும் கடினமாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டில் இருந்து பாதுகாக்க, பாதுகாப்பு இடங்கள் மற்றம் பதுங்குகுழிகள் வெட்டுவதில் பாதி நேரம் செலவழிக்கப்படுகின்றது. காலநிலை மாற்றங்களினால், பதுங்குகுழிகள் மாதாந்தம் பராமரிக்கப்பட வேண்டும். அடிக்கடி ஏற்படும் மழை பதுங்குகுழிகளில் நீரை நிரப்புவதால், பதுங்குகுழியின் தரத்தைத் தக்க வைக்கவும் அதைப் பாவனைக்கு உகந்ததாக்கவும் பாரிய கவனம் எடுக்கப்படும். எனவே, பாடசாலை நாட்களில் பத்து அல்லது அதினைந்து நாட்கள் ஒரு பாரிய மழையின் பின்னர் பதுங்குகுழிகளை மீள நல்ல நிலைக்குக் கொண்டுவருவதற்குச் செலவிடப்படுகின்றது.

இந்தப் பணியினால் தவறவிடப்பட்ட நாட்களைக் கருத்தில் கொண்டு பாடங்கள் வேகமாகவும் பாரிய அழுத்தங்களுடனும் வழங்கப்படுகின்றன. நாங்கள் தேசிய பாடத்திட்டம் மற்றும் தரத்துடன் ஒத்து இருக்க வேண்டும் என்பதால் வேறு வழி இல்லை. ஆனால் சூழலைக் கருத்தில் கொண்டு பாடசாலைப் பாடங்கள் மற்றும் இதர வேலைத் திட்டங்களில் நாங்கள் கூடியளவு உதவியையும், உதவி உபகரணங்களையும் வழங்குகினறோம். சிலநேரங்களில் தவறவிடப்பட்ட பாடசாலை நாள் அல்லது பாடத்துக்காக நாங்கள் மாலை நேர வகுப்புக்களும் கொடுத்து வருகின்றோம்.

மனிதர்களாகப் பிறந்த நாங்கள் பேச்சுரிமை, கல்வியுரிமை மற்றும் வாழ்வுரிமைக்கு உரித்தானவர்கள். அழிவுகள் ஏதுமற்ற விடுதலை பெற்ற ஒரு வாழ்கை வாழ வேண்டிய தேவை எமக்குண்டு. கல்வி மற்றும் தங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் அழுத்தங்களில் இருந்து உளவியல் விடுதலை அடைய வேண்டிய உரிமை மாணவர்களுக்கு உண்டு. வடக்குக் கிழக்கில் உள்ள தமிழர்களின் சமூக நல்ல சூழல், பொருளாதாரம், கல்வி, உளவியல் மற்றும் உடல் ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தும் இத்தகைய வன்முறைகளைத் தடுக்க சர்வதேச சமூகம் உடனடியாக செயற்பட வேணடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதாரத்தில் தாக்கம்



சிறீலங்காவின் பொருளாதாரம் இந்த இனப்போரினால் பாரியளவு பாதிக்கப்பட்டு உள்ளது. போரின் உத்வேகம் அதிகரிக்க பொருளாதாரம் வீழ்ச்சி அடையும். ஏ9 நெடுஞ்சாலையைத் திறந்த போர் நிறுத்த ஒப்பந்தத்துடன் பொருளாதாரம் வளர்ச்சி அடையத் தொடங்கியது. வடக்கு கிழக்கில் உள்ள தமிழர்கள் உட்பட இலங்கைத் தீவில் வாழும் இரு இனங்களுக்கும், வர்த்தகமும் சுற்றுலாப் பயணத் துறையும் சிறந்த வளர்ச்சியை எட்டியது.


அத்தியாவசியப் பொருட்களின் தடையினால் தமிழர்கள் மிகுந்த அவலங்களைச் சந்தித்திருந்தனர். இவர்களுக்கு முதலில் மூடி இருந்த பல கதவுகள் அமைதிப் பேச்சுவார்த்தையின்போது திறந்தன. அவற்றுள் வேகமாக வளர்ச்சி அடைந்த பொருளாதாரமும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் தாக்கம்

ஏ9 நெடுஞ்சாலையை மூடிய பின்னர, பல அதிதியாவசியப் பொருட்கள், சேவைகள் ஆகியவை மறுக்கப்பட மருத்துவ உதவியும் இதில் அடங்கியது. வடக்கு கிழக்கின் பொருளாதாரம் போரின் தாக்கத்தினால் பலத்த வீழ்ச்சி அடைந்திருந் தது. ஆனால் போர்நிறுத்தத்தின் போது ஒருளவு வழமையான நிலைக்கு பொருளா தாரம் திரும்பிக் கொண்டிருந்தது. இருப்பினும், அது ஒரு சிறந்த நிலைக்கு வரவில்லை. ஏ9 நெடுஞ்சாலை மூடிய சில கிழமைகளிலேயே இது நிருபிக்கப்பட் டது. இதனுடன், வான் தாக்குதல்கள் வான் பரப்பில் வந்ததனால் ஏற்கனவே வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்த பொருளாதாரத்துக்கு மேலதிக அழுத்தம் வழங் கப்பட்டது.

வான் தாக்குதல்களின் விளைவாக, பாரிய எண்ணிக்கையிலான நோயாளிகள் ஒரே நேரத்தில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். மருத்துவர்கள், தாதிக்கள், மற்றும் இதர மருத்துவப் பணியாளர்கள் ஏற்கனவே மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருந்ததனால், சுகாதார சேவைகள் வழங்குவத கடினமாக்கப்பட்டது. படுக்கைக ளும் மெத்தைகளும் போதாததால், மருத்துவப் பணியாளர்கள் தரையில் வைத்து சிகிச்சையும் பராமரிப்பும் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை வைத்தியர்க ளுக்கும் நோயாளிகளுக்கும் நிலைமைகளை வசதியற்றதாக்கியது. மயக்க மருந்து மற்றும் விறைப்பு மருந்து போன்ற காயங்களுக்கு சிகிச்சை வழங்க மிகவும் முக்கிய மான மருந்து வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டது. அவர்களிடம் இருந்து குறைந்த வளங்களைப் பயன்படுத்தி மருத்துவ சேவைகளை வழங்க வேண்டிய இறுக்கமான நிலைக்கு மருத்துவர்கள் தள்ளப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான படுகொலைகளும், பேரழிவுகளும் நடைபெறும் இந்த நாட்டில், காயங்கள், என்பது தவிர்க்க இயலாதது. இது வான் தாக்குதல்களால் ஏற்பட்ட காயங்களின் எண்ணிக்கையினால் நிருபணமாகின்றது. நிலைகுலைந்த பொருளாதாரத்தினால், மருந்துக்களினதும், அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் திடீர் அதிகரிப்பை அடைந்தன. பராமரிப்புக்கும் சத்திர சிகிச்சைக்கும் தேவையான பல மருந்துகளும் உபகரணங்களும் மருத்துவமனைகளிலும் மருத்துவ மையங்களிலுமே அரிதாகி இருந்தன. எதிர்பாராத எண்ணிக்கையிலான நோயாளிகளினால், மருந்துகள், உபகரணங்கள், பொருட்கள், மற்றும் பணியாளர்கள் ஆகியவற்றிற்கான தேவைகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அதிகரித்தன.

மக்கள் வாழும் வகுதிகளில் நடாத்தப்படும் வான் தாககுதல்கள் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் நாளாந்த செயற்பாடுகளில் தாக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. மூதூர், வாகரை, வேணாவில், பளை, அளம்பில் ஆகிய கிராமங்களில் ஏற்பட்ட வான் தாக்குதல்களினால் இடப்பெயர்வுகள் ஏற்பட்டன. கடந்த வருடத்தில் மட்டும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அளம்பில் என்னும் சிறிய பகுதியில் ஆறு தடவைகள் குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசியுள்ளன. ஏற்கனவே இந்த மக்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள். சுனாமியின் பீனனர் தஞ்சம் வேண்டி இந்த மக்கள் அளம்பிலில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு இருந்தவற்றையும் இழந்து அவர்கள் தங்களால் நாளாந்தம் உழைக்கக்கூடிய பணத்தைக் கொண்டு வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். அவசரகாலத்துக்காக எதையும் சேமித்து வைக்க இயலாத நிலைமையிலும் இவர்கள் இருந்தனர். இப்பொழுது செயற்கையான ஒரு துன்பியல் நிகழ்வு இந்த அளம்பில் கிராமா மக்களை ஆழ்ந்த துயரத்தில் இட்டுள்ளது. அவர்களின் வீடுகள், உயிர்கள், மற்றும் சொத்துக்கள் பறிக்கப்பட்ட நிலையில் இவர்களின் வாழ்வு வீபரிக்க இயலாத சோகங்களை அடக்கத் தொடர்கின்றது.

தங்களிடம் எஞ்சி இருந்த இருந்த சொத்துக்களை வீட்டு வடக்கு கிழக்கின் மையப் பகுதிக்குப் பலர் இடம்பெயரந்தனர். பல வருட காலத்தின் கடின உழைப்பின் பயனாக அவர்கள் சேர்த்து வைத்த சின்னச் சின்னச் சுகங்கள் அனைத்தையும் குண்டு வீச்சு விமானங்கள் தாக்கி அழிக்க அங்கு இருப்பதில் பயன் ஏதுமற்று அவ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து பல மக்கள் வாழ்கின்றனர். ஒரு புதிய இடத்துக்கு மீளக் குடியமர்வது, ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவது, ஒரு புதிய வீட்டை அமைப்பது, வேலை தேடுவது, உணவை சேகரிப்பது, பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புவது மற்றும் மன அமைதியை அடைவது ஆகியவற்றுடன் இடம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வு என்றுமே சுலபமாக இருந்ததில்லை. இது பல தமிழர்களின் வாழ்வியலின் ஒரு பகுதியாகவே வந்து விட்டாலும், பல தமிழர்களுக்கு இது இன்னமும் ஏற்றுக்கொள்ள இயலாததாகவே உள்ளது. இடம்பெயர்ந்த குடும்பங்கள் சமூக சேவை வழங்குனர்கள், சமூக சேவையாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சில நேரங்களில் சிறீலங்கா அரசாங்கம் அல்லது தமிழீழ விடுதலைப் புலி – களை தங்களுடைய கடினத்தைப் போக்கி உயர்வாழ்வதற்காய் நாடி வந்துள்ளனர். இத்தகைய சமூகக் குழுக்களிடம் வேலைவாய்ப்பு, வீடமைப்பு, உணவு, உடை, மற்றும் உளவியல் ஆதரவை இவர்கள் தங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில் என்ன நடக்கின்றது?

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திலும் தொடர்ச்சியான வான் தாக்குதல்களினால் 72'000 தமிழ் மக்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தற்காலிக முகாம்களிற்கு இடம்பெயர்ந்துள்ளனர். ஐம்பது தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள இந்த மக்கள் உணவு, உறைவிடம், குடிநீர், மலசல கூட வசதிகள் ஆகியவற்றின் அடிப்படைகளே பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளனர். இதன் விளைவாக இந்த மக்கள் ஒரு கேள்விக்குறியான எதிர்காலத்தையே நோக்கி உள்ளனர்.

ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் சம்பூர் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்காக இடம்பெற்ற போரின்போது இந்தத் தமிழர்கள் இடம்பெயர்ந்து 40'000 வரையிலான தமிழ் மக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை என்னும் இடத்தில் புகலிடம் பெற்றார்கள். 2006ம் ஆண்டு இறுதிப் பகுதிக்குள் வாகரையில் சண்டை உத்வேகம் அடைய இங்கும் அவர்களுக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. இப்பொழுது மட்டக்களப்பின் அகதி முகாம்களில் உறைவிடங்களைத் தேடி வாழும் இவர்கள் வாழ்வில் நம்பிக்கை இழந்தவர்களாகவே உள்ளனர். கிழக்கில் ஏற்பட்ட பாரிய மழைகளினால் பல முகாம்கள் நிலைகுலைந்தன. இருபத்து ஐந்துக்கும் மேற்பட்ட கொட்டகைகள் நிலைகுலைய பல கழிவறைகளின் மேற்பகுதிகளும் மழையில் அடித்துச் செல்லப்பட்டன. தற்காலிக உறைவிடங்கள் பாரிய மழைக்கு ஈடுகொடுக்க இயலாததால் மக்கள் ஈரமான சூழ்நிலைகளில் வாழ்வதற்குத் தள்ளப்பட்டனர்.

இதனால் மழை தொடர்பான வியாதிகள் இவர்கள் மத்தியில் அதிகரித்த வண்ணம் உள்ளன. அறுபத்தி எட்டு கர்ப்பவதிகள், அறுபத்தி ஒன்று தாய்மார்கள் மற்றும் இருபத்தி ஐந்து கைக்குழந்தைகள் உட்பட நூற்றி எண்பத்தியெட்டு குடும்பங்கள் வாழ்வதற்கு இந்த முகாம்கள் நிச்சயமாக உகந்த இடங்கள் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரி கந்தையா


என்னுடைய கணவரும் நானும் இரண்டு குழந்தைகளும், வேணாவில்லில் உள்ள ஒரு வீட்டில் வசித்து வந்தோம். என்னுடைய கணவர் ஒரு மிதிவெடிச் சம்பவத்தில் தனது ஒரு காலை இழந்து விட்டார். அவர் உந்துருளியில் குளிர்களி விற்று வரம் பணத்தில் நாங்கள் எங்கள் நாளாந்த வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தோம். அது எங்களுக்குப் போதாவிட்டாலும் ஓரளவு நிம்மதியான சீவயமாக இருந்தது. நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேகரித்து ஒரு வீட்டைக் கட்ட ஆரம்பித்தோம். எங்கள் வீட்டைக் கட்டி முடிக்க கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் எங்களுக்கு எடுத்தது. கூரைக்கு ஓடுகள் வாங்க இயலாததால், நாங்கள் உலோகத் தகரங்களையே பயன்படுத்தி இருந்தோம். பாதை மூடப்பட்டதாலும் போர் மீளத் தொடங்கியதாலும் அதுவே எங்களுக்கு 2000 தொடக்கம் 3000 ரூபாய்கள் முடிந்தது. ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு தகரம் வாங்கினோம். ஒவ்வொன்றாக வாங்கி, கடைசியாக எங்கள் கூரையை முடித்தோம். இப்பொழுது எங்களிடம் எதுவுமில்லை. ஐந்து தகரங்கள் சேதமடைந்து விட்டன. எங்கள் முழு வீடும் இடிந்து விட்டது. குளிர்களி விற்பனையை விட நான் நாற்பத்து ஐந்து கோழிக்குஞ்சுகள் வளர்த்து வந்தேன். அதன் முட்டைகளை சந்தையில் விற்று மேலதிக வருமானம் பெற்றுக் கொண்டிருந்தேன். எனது பிள்ளைகளுக்கு பிறந்தநாள் வரும்போது அவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வாங்கவும் அவர்களின் எதிர்காலத்துக்காகச் சேமித்து வைக்கவும் நான் இந்தப் பணத்தையே பயன்படுத்தி வந்தேன். 20'000 ரூபாய்கள் சேமித்து வைத்து என்னுடைய முதலாவது குழந்தைக்கு சில நகைகள் வாங்கலம் என்று இருந்தேன். இப்பொழுது எங்கள் பிரதேசத்தில் இடம்பெற்ற கிபீர் குண்டு வீச்சினால் என்னுடைய 25 கோழிக் குஞ்சுகள் இறக்க, மீதமாக என்னிடம் 20 கோழிக் குஞ்சுகளே எஞ்சியுள்ளது. எங்கள் பிரதேசத்தில் தொடர்ச்சியாக வான் தாக்குதல் இடம்பெறுவதால் அந்தக் கோழிகளை வைத்திருக்க எனக்குப் பயமாக உள்ளது. அவற்றையும் நான் இழந்தால், அதன் மூலம் நான் பெற்றுக் கொள்ளும் அந்தச் சிறிய வருமானமும் எனக்குக் கிடைக்காது. நான் அதை விற்றால் நான் பெறும் பணம் அவற்றை நான் வைத்திருந்தால் வரும் பணத்தினோடு ஒப்பிடும்போது மிகுந்த குறைந்த அளவாகவே இருக்கும். இப்பொழுது எனக்கு உள்ள ஒரே வழி இதுதான். என்னுடைய பிரதேசத்தில் கிபீர் தாக்குதல்கள் குறையும் வரை நான் கோழிக்குஞ்சுகளை வைக்க வேறு எந்த இடமும் எனக்கு இல்லை. நாங்கள் இருக்கும் இடத்தில் உள்ள குடும்பங்கள் பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் உறவினர்கள் இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். என்னுடைய அம்மா, அண்ணா, சகோதரிகள் அனைவரும் வேணாவில்லில்தான் வாழ்ந்து வருகின்றோம். இப்படியான நேரங்களில் வேறு எங்கயாவது ஓடி பாதுகாப்புத் தேடிக் கொள்ள எனக்கு இயலாது. என்னுடைய குடும்பமே இங்கு வாழ்வதால், என்னுடைய வீடு மட்டுமல்லாது, என்னுடைய அம்மாவின் வீடு, அண்ணாவின் வீடு எல்லாமே சேதமாக்கப்பட்டது. நான் உதவி கேட்பதற்கு வேறுயாரும் இல்லை. நாங்கள் எங்களிடம் உள்ள அந்த 20'000ஐப் பயன்படுத்தி வீட்டைச் சீரபடுத் தப் போகின்றோம். இது எங்களை குளிரிலும் மழையிலும் இருந்து காப்பாற்றி எங்கள் பொருட்களை வைத்திருக்க வழி செய்யும். அதன் பினனர் கடவுள் வழிவிட்டால் நாங் கள் மீண்டும் ஒருமுறை முயற்சித்து எங்கள் பெண்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கிக் கொர்டுக்கலாம். நாங்கள் ஒரு திறந்த பதுங்குகுழி ஒன்று வெட்டியுள்ளோம். அதில் என்னுடைய கணவர் குளிர்களி கோண்களை வைப்பார். அதுதான் எங்கள் வருமானம். ஒரு தாக்குதலில் அது சேதமடைந்தால், எங்களது வாழ்வு மீண்டும் வேதனை நிறைந்ததாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயத்தில் வாழ்தல்

**ஆதிலக்சுமி சிவகுமார், 45**
**செல்வபுரலம், கிளிநொச்சி**

முதல் முதலில் நான் குண்டு வீச்சு விமானங்களைச் சந்தித்தது சென். பீட்டர் தேவாலயத்தில் இடம்பெற்ற குண்டு வீச்சின் போதே. எங்கள் பிரதேசத்தில் ஒரு பரந்தளவிலான தாக்குதல் இடம்பெற்றது. என்னுடைய சித்தி ஒருவர் எங்களுக்கு முன் வீட்டிலும், மாமி எங்களுக்கு அருகில் உள்ள ஒரு வீட்டிலும் வாழந்து வந்தனர். என்னுடைய சித்தியின் மகன் அந்த நேரம் எனது வீட்டுக்கு வந்திருந்தார். அவருக்கு காலில் சின்னக் காயம் ஏற்பட்டு கவனிக்காமல் விட்டிருந்ததால் சிதழ் கட்டியிருந்தது.



அவர் மருத்துவரிடம் கொண்டு போனால் அவர் கிருமி எதிர்ப்பு மருந்தினால் தேய்ப்பார் என்பதால் காயத்துக்கு சிகிச்சை பார்க்க விரும்பவில்லை. எனவே அன்று காலை எனது கணவர் அவனைக் கட்டாயப்படுத்தி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காயத்துக்கு வைத்தியம் பார்த்தார். மருத்துவர்களிடம் சென்ற பின்னர், அவன் எங்கள் வீட்டில் தங்கியிருந்தான்.

குண்டு வீச்சு விமானங்களின் சப்தம் கேட்டதும் நான் அவனை அவனது வீட்டக்குச் செல்லுமாறு எச்சரித்தேன். கிபீர் எங்கள் வீட்டின் மீது குண்டு போட்டால், அவனின் குடும்பத்தவர் அனைவரும் உயிர்வாழ அவன் மட்டும் இறப்பதை நான் விரும்பதில்லை, அதே நேரம் அவரின் வீட்டின் மேல் குண்டு போட்டு அவரின் குடும்பத்தினர் அனைவரும் இறக்க அவர் மட்டும் உயிர வாழ்வதையும் நான் விரும்பவில்லை. இரண்டுமே கற்பனை செய்ய மிகவும் பயங்கரமானதாகயிருந்தது. எனவே நா் அவனை அனுப்பினான்.

ஆனால் துரதிஸ்டவசமாக அவன் வீட்டுக்குச் செல்லும் வழியில் இறந்து விட்டான். அவனுடைய வீட்டு வாசறகதவில்வைத்து அவன் இறந்தான். என்னடைய தம்பி, ஒரு சின்னக் காயத்தையே தாங்க இயலாதவன், ஒரு குண்டு அவனின் மேல் வீழும் போது எவ்வளவு துடித்தி ருப்பான். அன்றைய நாளில் இருந்த குண்டு வீச்சு விமானங்கள் என்றால் எனக்குப் பயம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு தடவையும் அது என்னுடைய குடும்பம் என்றும் எங்களையே இலக்கு வைக்கப்படுகின்றது போன்ற எண்ணமும் வந்து பயமடைந்தேன. வேவு விமானம் வந்தவுடன் மறுகணம் சிந்திக்காமல் உடனடியாக நான் பதுங்குகுழிக்குள் இறங்கி விடுவேன். விழாக்கள், கோவில்கள், நிகழ்வுகள் அல்லது வேறு வீடுகளுக்குச் செல்லும்போது நான் முதலாவதாகப் பார்த்து வைப்பது பதுங்குகுழிகளையே. அங்கு பதுங்குகுழி இல்லாவிட்டால் நான் போகவோ தங்கவோ மாட்டேன். எந்த அவசரமாக இருந்தாலும், மருத்துவமனைக்குச் செல்வதாக இருந்தாலும் நான் வேவு விமானம் சுற்றும்போது போக மாட்டேன்.

என்னுடைய பயத்தைப் பற்றி அறிந்த எனது சகோதரன் ஒரு சீமெந்து பதுங்குகுழியை அமைப்பதற்கு எனக்கு பணம் அனுப்பியிருந்தான். அதற்கு எனக்கு 50'000 இலங்கை ரூபாய்கள் தேவைப்பட்டது. பதுங்குகுழிதான் எனது பாதுகாப்பு இடம். அங்குதான் நான் ஓரளவாவது குண்டு வீச்சு விமானங்களின் பாதிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவேன் என நான் நம்புகின்றேன். அப்படியிருந்தாலும், அந்த விமானங்கள் தாழப் பறக்க, என்னுடைய வயிறு பதட்டத்தில் அடித்துக் கொள்ளும்.

இரவு நேரங்களில் அடிக்கடி விமானங்கள் வரும்போது, ஒரு நாள் கூட நான் வீட்டின் உள் உறங்குவதில்லை. பதுங்குகுழியின் அருகில்தான் படுப்பேன். என்னால் அந்த நாட்களை மறக்க இயலாது. பெயருக்குத்தான் நான் உறங்குவேன். உண்மையில், அந்த இரவுகளில் என்னால் முழுமையாக உறங்க இயலாது. எவ்வளவு கடினமாக இருப்பினும், எவ்வளவு நான் முயற்சித்தாலும், என்னால் இந்தப் பயத்தை எதிர கொள்ள இயலாது. வேவு விமானங்களோ அல்லது குண்டு வீச்சு விமானங்களோ வந்த மறுகணமே என்னால் செயற்பட இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

மொத்தத்தில் வான் தாக்குதல்களின் தாக்கம் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் உள்ள தமிழர்களின் உடல், உளவியல் நலன், சூழ்நிலை பராமரிப்பு, கல்வி மேம்பாடு, பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் வெளிப்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியாக நடைபெறும் போருடன், சுனாமி, போன்ற இயற்கை அழிவுகளினாலும் இப்பொழுது குண்டுத் தாக்குதல்களினாலும் தமிழர்களின் வாழ்வு சூறையாடப்பட்டுக் கொண்டுள்ளது. பல வழிகளில் இவை தமிழர்களைப் பாதித்து உள்ளது. இனப்போர், பொருளாதாரத் தடை, படுகொலைகள், இடப்பெயர்வு மற்றும் பட்டினி போன்ற ஒருவரின் வாழ்வின் பல அம்சங்களை இந்தத் தாக்குதல்கள் இலக்கு வைக்கின்றன.

வான் தாக்குதலின் தாக்கம் வார்த்தைகளில் வடிக்க இயலாதது. அதை அனுபவித்தவர்களால் மட்டுமே அதன் தாக்கத்தை முழுமையாக விளங்கிக் கொள்ள இயலும். எவ்வளவு முயற்சித்தாலும், இத்தகைய பாரதூரமான தாக்குதல்களின் முழுத் தாக்கத்தையும், ஒருவரால் விளங்க இயலாது. ஆதரவும் உதவியும் வழங்குவதனால் மட்டுமே நாங்கள் பாதிக்கப்பட்டவர்களை விளங்கிக் கொள்கின்றோம் எனக் காட்ட இயலும்.

ஒவ்வொரு நாளும் வாழ்வின் பல அம்சங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் வான் தாக்குதல்களின் கொரூரத்தைக் குறைக்க ஏற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன. சுகாதார சேவைகள் என்னும் ரீதியில் வடக்கு உள்ள பல மருத்துவமனைகளில் பதுங்குகுழிகள் கட்டப்பட்டுள்ளன. பல பொதுமக்களுக்கு முதலுதவி தொடர்பான வகுப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

கூடுதலாகக் கிபீர் தாக்குதலில் தாக்கப்பட்டவர்கள் இரத்தம் அதிகப்படியாக வெளியேறுவதால் இறப்பை சந்திக்க நேரிடுவதால், அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்து வரும் வழியில் அவர்கள் உயிர்களைக் காப்பாற்றும் ஒரு முயற்சியாக இந்த முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது. பொதுமக்களுக்கு இந்த அழிவுகள் தொடர்பாக அறிவித்தலும் அது தொடர்பான பட்டறைகள் விழிப்புணர்வு கருதரங்குகள் போன்றவற்றை நடாத்துதலும் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டுள்ளன.

இந்த விடயத்தில் கல்வி வசதிகளும் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளன. பாடசாலை நேரங்களில் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி பதுங்குகுழிகளைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் மாணவர்களுக்கு ஏற்றாற்போல் மாற்றியமைக்கப்பட்டது.

பல சமூக சேவையாளர்களாலும், அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் பல ஏற்பாடுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் உள்ள கசப்பான உண்மை என்னவென்றால் நாங்கள் ஒரு நிகழ்வுக்குப் பின்னரான பதில் செயற்பாடுகளிலேயே ஈடுபட இயலும். இந்தப் போர் ஒரு முடிவுக்கு வரும் வரை பொதுமக்கள் தொடர்ந்து வான் தாக்குதல்களின் இலக்குகளாக இருந்து வருவார்கள் என்பது திண்ணம். இத்தகைய அழிவுகளின் ஊடாக மக்களின் உயிர வாழ்தலையும் நம்பிக்கையையும் பேணிப் பாதுகாப்பது எங்களுடைய தலையாய கடமையாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருமுன் காப்பதே மேலானது!!

அனைத்து கதைகளும் எங்களுக்கு ஒன்றை மட்டும் கூறி நிற்கின்றன. வருமுன் காப்பதே மேலானது. நடந்து முடியும் வரை மக்களின் துன்பங்கள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. இது தமிழ் மக்களின் துயர் நிறைந்த வரலாறு. இது எந்த வகையில் நியாயம்? மனித உயிர்களான எங்களின் செயற்பாடுகள் அனைத்தும் மனித நேயத்தையே பிரதிபலிக்க வேண்டும். வன்முறையை விடப் பாகுபாடு என்பது ஒரு பாரிய குற்றம். இத்தகைய சம்பவங்களில், சர்வதேச சமூகத்தின் அமைதி பல உயிர்களைப் பல்கொள்கின்றது என்றே கொள்ளவேண்டும்.

ஹிரோசிமா, மற்றும் நாகசாகியின் மீதான குண்டுத் தாக்குதல் அமெரிக்காவின் வரலாற்றில் மட்டுமல்லாது உலக வரலாற்றிலேயே ஒரு கரும்புள்ளி எனக் கொள்ளலாம். நேரடிப் பாதிப்புக்கு ஆளானவர்கள் தவிர்ந்து, பல தலைமுறைகளாக இந்தக் குண்டு வெடிப்பின் தாக்கத்தை உணர்ந்தார்கள். பலரின் வாழ்வு குற்ற உணர்வுகளால் மழுங்கடிக்கப்பட்டது.

சர்வதேசத் தலையீட்டுடன் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் நடக்கும் வான் தாக்குதல்கள் தடுக்கப்படலாம். இதற்கு உலகின் அரவணைப்பு மட்டுமே தேவைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | திகதி | இடம் | இறப்புக்கள் | காயங்கள் | சேத விபரம் |
|---|---|---|---|---|---|
| | | ஏப்ரல் 2006 | | | |
| 1. | 25.04.2006 | திருகோணமலை – கிழக்கு மூதூர் | 12 | 27 | மக்கள் குடியிருப்பு வீடுகள் |
| | | மே மாதம் வான் தாக்குதல்கள் இடம்பெறவில்லை | | | |
| | | ஜூன் 2006 | | | |
| 2. | 16.06.2006 | கிளிநொச்சி | - | - | செல்வபுரம் உதவி முகாம் மற்றும் 300 குடும்பங்கள் உள்ள வட்டுவாகல் பாலம் சுனாமி நிவாரண முகாம் |
| 3. | 16.06.2006 | மட்டக்களப்பு – தரவை, புலிபாய்தல், படுவாங்கரை | - | - | மக்கள் குடியிருப்பு வீடுகள், பண்ணைகள் |
| | | ஜுலை 2006 | | | |
| 4. | 26.07.2006 | ஈச்சிலம்பற்று, தோணிதாண்டகல், திருகோணமலை | - | 02 | 2 வீடுகள் சேதம் |
| 5. | 27.07.2006 | மாவிலாறு, திருகோணமலை | 06 | 03 | --- |
| | 28.07.2006 | கேப்பாப்புலவு, முல்லைத்தீவு | - | - | – |
| 6. | 28.07.2006 | குதிரவெளி மட்டக்களப்பு | 06 | 03 | — |
| 7. | 30.07.2006 | கரடியனாறு, மட்டக்களப்பு | 08 | 04 | — |
| | | ஆகஸ்ட் 2006 | | | |
| 8. | 02.08.2006 | திருகோணமலை - வெருகல், சூரைக்குடா, வாகரை, பாலச்சேனை | - | - | மக்கள் குடியிருப்பு – வீடுகள் சேதம் |
| 9. | 05.08.2006 | மூதூர், திருகோணமலை | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 10. | 07.08.2006 | மூதூர், திருகோணமலை திருகோணமலை | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 11. | 08.08.2006 | ஈச்சிலம்பற்று, மூதூர், திருகோணமலை | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம், காடுகளும் மரங்களும் அழிக்கப்பட்டன |
| 12. | 10.08.2006 | வாகரை, கதிரவெளி, வெருகல், ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்கு, மட்டக்களப்பு | 75 | 200 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம், காடுகளும் மரங்களும் அழிப்பு |
| 13. | 11.08.2006 | மட்டக்களப்பு –தரவை, மையங்குளம், இறால்குளம் | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 14. | 12.08.2006 | பூனகரி | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 15. | 13.08.2006 | இயக்கச்சி, சங்கானை, வன்னி | - | 04 | வயல் வெளிகள் சேதம் |
| 16. | 14.08.2006 | செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் - வள்ளிபுனம் | 56 | 129 | 53 மாணவர்கள் மூன்று பணியாளர்கள் கட்டடம் சேதம் மரங்கள் அழிக்கப்பட்டது |
| 17. | 16.08.2006 | சுனாமி நிவாரண முகாம்கள், நெல்லியன் | - | - | கப்பல் கட்டுமானத் தொழிற்சாலை முழுமையாக அழிக்கப்பட்டது |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | 22.08.2006 | பளை, யாழ்ப்பாணம் | - | - | குடியிருப்புகள் சேதமடைந்தது |
| 19. | 23.08.2006 | புதுக்காடு, தாளையடி வடமராட்சி கிழக்கு | - | - | குடியிருப்புக்கள் சேதமடைந்தது |
| 20. | 24.08.2006 | வடமராட்சி கிழக்கு, யாழ்ப்பாணம் | - | - | கடற்கரைப் பகுதி — கப்பல்களும், கொட்டில்களும் அழிக்கப்பட்டது |
| 21. | 25.08.2006 | முல்லைத்தீவு — புதுக்குடியிருப்பு | - | - | குடியிருப்பு சேதமடைந்தது |
| 22. | 26.08.2006 | மூதூர் திருகோணமலை | 02 | 05 | குடியிருப்பு சேதமடைந்தது |
| 23. | 28.08.2006 | மூதூர் கிழக்கு, பள்ளிகுடியிருப்பு, பாட்டாளிபுரம், சீனையூர் திருகோணமலை | 20 | 26 | குடியிருப்புக்கள் சேதமடைந்தது, மரங்கள் அழிக்கப்பட்டன |
| 24. | 30.08.2006 | இயக்கச்சி | - | - | — |
| | | செப்டம்பர் 2006 | | | |
| 25. | 12.09.2006 | சுண்டிக்குளம், பேய்ப்பராப்பிட்டி | - | 04 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம், கப்பல் இயந்திரம் அழிவு |
| 26. | 25.09.2006 | முல்லைத்தீவு — சேமல்லை, நாயாறு | - | - | — |
| 27. | 27.09.2006 | வற்றாப்பளை, கேப்பாப்பிலவு— முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 28. | 29.09.2006 | வாகரை, கண்டலடி — மட்டக்களப்பு | - | - | பனை வயல்கள் சேதம், உயிரினங்களின் வாழ்வியல் பாதிப்பு |
| | | ஒக்டோபர் 2006 | | | |
| 29. | 16.10.2006 | புதுக்குடியிருப்பு, வேணாவில் முல்லைத்தீவு | 04 | 10 | — |
| 30. | 17.10.2006 | கிளிநொச்சி | - | 02 | ஒலிபரப்புத் தொகுதி மற்றும் கோபுரம் சேதம் |
| 31. | 17.10.2006 | கைவேலி, புதுக்குடியிருப்பு | - | 02 | பல வீடுகள் சேதம் |
| 32. | 18.10.2006 | தாளையடிச்சேனை | 1 | 2 | 6 வீடுகள் சேதம் |
| 33. | 18.10.2006 | வெலிகந்தை | - | - | — |
| | | நவம்பர் 2006 | | | |
| 34. | 02.11.2006 | புதுக்குடியிருப்பு, தேவிபுரம், முல்லைத்தீவு | - | 02 | மக்கள் குடியிருப்பு — 3 வீடுகள் சேதம் |
| 35. | 08.11.2006 | வாகரை, மட்டக்களப்பு | - | - | — |
| 36. | 02.11.2006 | கிளிநொச்சி | 05 | 01 | மருத்துவமனை சேதம் - குழந்தைப் பேறுப் பகுதி, அருகில் இருந்த வீடு முழுமையாக அழிக்கப்பட்டது. அதிர்வில் நோயாளி இறந்தார் |
| 37. | 20.11.2006 | மன்னார், பூநகரி, கிராஞ்சி | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 38. | 21.11.2006 | வன்னி | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் - ஒரு வீடு முழுமையாக |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | **டிசம்பர் 2006** | | | |
| 45. | 03.12.2006 | தேவிபுரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு | • | 2 | 3 வீடுகள் சேதம் |
| 46. | 12.12.2006 | வாகரை, கட்டுமுறிப்பு, கதிரவெளி, பாற்சேனை மட்டக்களப்பு | • | • | மக்கள் குடியிருப்பு – 4 வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டது |
| 47. | 26.12.2006 | வாகரை, மட்டக்களப்பு | • | • | 5 வீடுகள் அழிக்கப்பட்டது கனாபி நினைவு தினம் நிறுத்தப்பட்டது |
| 48. | 28.12.2006 | ஈச்சிலம்பற்று, திருகோணமலை | • | • | கோவில் அழிக்கப்பட்டது கடை சேதம் |
| 49. | 30.12.2006 | சிலாவத்தை, முல்லைத்தீவு | • | 5 | கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் தங்ககம் சேதம் |
| 50. | 30.12.2006 | வாகரை, மட்டக்களப்பு | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் மற்றும் பண்ணைகள் சேதம் |
| | | **ஜனவரி 2007** | | | |
| 51. | 02.01.2007 | இலுப்பைக்கடவை | 16 | 40 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டன |
| 52. | 02..01.2007 | வாகரை, மட்டக்களப்பு | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் முழுமையாக அழிக்கப்பட்டன |
| 53. | 03.01 2006 | வாகரை மட்டக்களப்பு | • | • | வீடுகள் சேதம் பயன்தரு மரங்களும் பயிர்களும் அழிக்கப்பட்டது |
| 54. | 04.01.2007 | அளம்பில், முல்லைத்தீவு | • | 07 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 55. | 05.01.2007 | அளம்பில், முல்லைத்தீவு | • | 05 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 56. | 05.01.2007 | கதிரவெளி மட்டக்களப்பு | • | • | வீடுகள் சேதம், கால்நடைகள் இறந்தன |
| 57. | 06.01.2007 | பளை யாழ்ப்பாணம் | • | • | --- |
| 58. | 06.01.2007 | வன்னி – வடமராட்சி வடக்கு, கட்டைக்காடு | • | • | --- |
| 59. | 14.01 2007 | வாகரை, கதிரவெளி, மட்டக்களப்பு | • | • | மக்கள் குடியிருப்பு வீடுகள் சேதம் |
| 60. | 25.01.2007 | முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| | | **பெப்ரவரி 2007** | | | |
| 61. | 08.02.2007 | அளம்பில் முல்லைத்தீவு | • | 05 | குடியிருப்புக்கள் சேதம் |
| 62. | 12.02.2007 | விசுவமடு பிரமந்தனாறு, முல்லைத்தீவு | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 63. | 15.02.2007 | நாயாறு, முல்லைத்தீவு | • | 03 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 64. | 16.02.2007 | பளை யாழ்ப்பாணம் | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 65. | 20.02.2007 | பூவரசங்குளம், வவுனியா | 02 | 03 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 66. | 21.02.2007 | விசுவமடு, முல்லைத்தீவு | • | • | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம், வயல்கள், பயிர்கள் சேதம் |
| 67. | 28.02.2007 | நாயாறு, முல்லைத்தீவு | • | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மார்ச் 2007 | | | |
| 68. | 07.03.2007 | முகமாலை, கிளாலி, அளம்பில் | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 69. | 13.03.2007 | படுவான்கரை, தொப்பிக்கலை, மட்டக்களப்பு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 70. | 15.03.2007 | முல்லைத்தீவு, மாத்தளன் | - | - | — |
| 71. | 18.03.2007 | முழங்காவில், நாச்சிக்குடாவில், மன்னார் | - | 01 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 72. | 20.03.2007 | கண்டிக்குளம் முல்லைத்தீவு | - | 10 | பள்ளிக்கூடக் கட்டடம் சேதம், |
| 73. | 21.03.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| | 21.03.2007 | வவுணதீவு - மட்டக்களப்பு | - | - | — |
| 74. | 27.03.2007 | கல்லியடி, கனகராயன்குளம், மன்னார் | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 75. | 30.03.2007 | புதுக்குடியிருப்பு, மத்தளம், கேப்பாப்பிலவு - முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 76. | 30.03.2007 | புளியங்குளம், வவுனியா | - | 01 | — |
| 77. | 31.03.2007 | மாத்தளன், கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | - | குடியிருப்புக்கள் சேதம் |
| | | ஏப்ரல் 2007 | | | |
| 78. | 01.04.2007 | புளியங்குளம், வவுனியா | - | 01 | — |
| 79. | 03.04.2007 | அளம்பில், முல்லைத்தீவு | - | 04 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 80. | 04.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 02 | 04 | வெண்புறா சேதம் |
| 81. | 06.04.2007 | இயக்கச்சி, கட்டைக்காடு | - | - | மக்கள் குடியிருப்பு, 10 வீடுகள் முழுமையாக சேதம் |
| 82. | 09.04.2007 | கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு | - | - | மரங்கள் சேதம் |
| 83. | 09.04.2007 | கிளிநொச்சி | - | - | — |
| 84. | 12.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | - | — |
| 85. | 13.04.2007 | விசுவமடு, முல்லைத்தீவு | 01 | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 86. | 16.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 87. | 17.04.2007 | கிளிநொச்சி | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 88. | 18.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 89. | 18.04.2007 | கைவேலி, புதுக்குடியிருப்பு | - | - | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| 90. | 18.04.2007 | விசுவமடு முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 91. | 19.04.2007 | கைவேலி புதுக்குடியிருப்பு | - | - | கட்டுப் பகுதி அழிக்கப்பட்டது |
| 92. | 20.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | 01 | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 93. | 21.04.2007 | மன்னார் | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 94. | 22.04.2007 | முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 95. | 24.04.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 01 | 05 | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 96. | 24.04.2007 | மன்னார் பரப்புக்கடந்தான் | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 97. | 26.04.2007 | திருவையாறு, கிளிநொச்சி | - | 02 | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 98. | 27.04.2007 | பரப்புக்கடந்தான், மன்னார் | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| | | | மே 2007 | | |
| 99. | 05.05.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 100. | 07.05.2007 | கல்மடு, கிளிநொச்சி | - | 02 | வீடு சேதம் |
| 101. | 08.05.2007 | புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு | 01 | - | சொத்துக்கள் சேதம் |
| 102. | 10.05.2007 | கைவேலி, புதுக்குடியிருப்பு | - | - | வீடுகள் சேதம் |
| 103. | 11.05.2007 | புதுக்குடியிருப்பு | - | -- | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம், சொத்துக்கள் சேதம் |
| 104. | 12.05.2007 | ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 105. | 18.05.2007 | கிராஞ்சி, பூநகரி | - | - | மக்கள் குடியிருப்பு சேதம் |
| 106. | 20.05.2007 | கஞ்சிகுடிச்சியாறு, மட்டக்களப்பு | - | -- | --- |
| 107. | 22.05.2007 | ஏ9 நெடுஞ்சாலைக்கு அருகில், மாங்குளம் | --- | -- | --- |
| 108. | 29.05.2007 | புதுக்குடியிருப்பு, வேணாவில், முல்லைத்தீவு | 01 | 03 | மக்கள் குடியிருப்பு, வீடுகள் சேதம் |
| | | | ஜூன் 2007 | | |
| 109. | 04.06.2007 | வலைப்பாடு மன்னார் | - | - | வீடுகள் சேதம் |
| 110. | 05.06.2007 | மாங்குளம் | - | - | பள்ளிக்கூடம் இடைநிறுத்தப்பட்டது |
| 111. | 06.06.2007 | கிளிநொச்சி | - | - | பள்ளிக்கூடம் இடைநிறுத்தப்பட்டது |
| 112. | 09.06.2007 | வாகனேரி மற்றும் படுவான்கரை மட்டக்களப்பு | - | - | --- |
| 113. | 26.06.2007 | மன்னார் சிலாவத்துறை, குடும்பிமலை மட்டக்களப்பு | - | - | --- |
| | | | ஜூலை 2007 | | |
| 114. | 11.07.2007 | அளம்பில் முல்லைத்தீவு | 2 | 11 | கிராமம் அழிவில் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலர் நினைவு மருத்துவமனை – வான் தாக்குதல் தொடர்பான அறிக்கை

*14/08/2006*

1. செஞ்சோலை வளாகம் – வள்ளிபுனம், முல்லைத்தீவு, காலை 7.00 மணி
    - நூற்றுக்கு மேற்பட்டோர் காயம் (சிறிய காயங்கள் உட்பட)

2. சுண்டிக்குளம் – முல்லைத்தீவு, 17.00 மணி
    - இருவர் காயம்

3. தேவிபுரத்தில் உள்ள வீடுபதுங்குகுழியில் மாரடைப்பு ஏற்பட்டு வயதான
    - ஒருவர் இறந்தார்
    - மரத்தில் தேங்காய் பிடுங்கிக் கொண்டு இருந்த ஒருவர் பாரிய காயங்களுக்கு உள்ளாகின்றார்

*16/10/2006*

1. கைவேலி, புதுக்குடியிருப்பு வீடுகள் – 00.50 மணி (இரவு)
    - 60 பேர் காயம் (சிறு பெண் உட்பட)
    - சிகிச்சை பலனிக்காமல் மருத்துவமனைக்கு வரும் வழி யில் 11 பேர் இறப்பு

2. வெண்புறா – கைவேலி, புதுக்குடியிருப்பு
    - 10 பேர் காயம்
    - காயப்பட்டவர்களில் மூவர் மருத்துவமனைக்குச் செல் லும் வழியில் இறப்பு
    - பொதுப் பேரூந்து ஓட்டுனர் ஒருவர் இறப்பு

*29/05/2007*

1. வேணாவில் மக்கள் குடியிருப்பு – புதுக்குடியிருப்பு
    - இருவர் காயம்
    - பதுங்குகுழியில் இருந்த பெண் காயம்
    - பாதுகாப்புத் தேடி ஓடும்போது வயதான ஒரு பெண் இறப்பு

*30/05/2007*

1. வேணாவில் மக்கள் குடியிருப்பு – புதுக்குடியிருப்பு
    - பயத்தினால் இளம்பெண் மயக்கமடைந்தார்.

குறிப்பு இங்கு காட்டப்பட்டுள்ள மருத்துவக் குறிப்புக்கள் சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையினது மட்டுமே. கிபீர் தாக்குதல்களின் விளைவாக மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே இது காட்டுகின்றது. ஏனைய மருத்துவமனைகளையோ அல்லது மொத்த இறப்புக்களையோ காயமுற்றவர்களையோ இது காட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சோலை குண்டு வெடிப்புச் சம்பவம்

- மொத்த எண்ணிக்கை (காயப்பட்ட பெண்கள்) – ೩10

- சத்திர சிகிச்சை நிபுணர் பொன்னம்பலம் நினைவு மருத்துவமனையில் சிகிச்சை கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை – ೩3
  - வயிற்றுக் காயங்கள் – 04
  - வயிற்றுக் காயமும் எலும்பு முறிவும் – 01
  - வயற்றுக் காயமும் ஒரு கண் அகற்றப்பட்டது – 01
  - பல வெட்டுக் காயங்கள் – 04
  - முன் கை எலும்புகள் முறிவு மற்றும் வெட்டுக் காயங்கள் – 0೩
  - பாரிய வெட்டுக் காயங்கள் – 03
  - சத்திர சிகிச்சை (இரத்தக் குழாயில் சேதம்) – 01
  - சிறிய காயங்கள் – 10
  - முகக் காயங்கள் – 0೩

- முல்லைத்தீவ பொது மருத்துவமனை (நடுத்தரக் காயங்கள்) – 63

  – உதாரணம்:
  - உடைந்த கால் எலும்புகள்
  - தலைக் காயங்கள்
  - பலதரப்பட்ட வெட்டுக்காயங்கள்
  - பாரிய வெட்டுக்காயங்கள்
  - முகக் காயம்

- புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனைக்கு மாற்றம் செய் யப்பட்டவர்கள் – 31
  - உள் வயிற்றுக் காயம் – 3

    - ஜேர்மனிய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வயற்றுக் காயங்களுக்குரிய சிகிச்சை வழங்கப்பட்டது

- கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டவர்கள் – 66
  - பாதிப்பேர் தீவிரக் காயங்கள்
  - பாதிப்பேர் நடுத்தரக் காயங்கள்

    – அனைத்து காயங்களுக்கும் சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவையிருந்தது

- சுகாதார சேவைகள் மையத்தில் கொண்டு வரப்பட்டவர்கள் – 40
  - வயிற்றுக் காயம் – 09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் இணைப்பு IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துன்பியல் நிகழ்வுகளின் பின்னரான மன அழுத்த நோயைத் தீர்மானிக்கும்

*I.* பின்வரும் இரு விடயங்களும் உள்ளடக்கிய ஒரு துன்பியல் நிகழ்வை ஒருவர் சந்தித்துள்ளார்:

- மரண அச்சுறுத்தல் அல்லது தீவிரக் காயம் அல்லது உடல் ரீதியான அச்சுறுத்தல் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளை ஒருவர் அனுபவித்துள்ளார்
- அவரின் பதில் செயற்பாடு தீவிர பயம், உதவியற்றதன்மை மற்றும் பயங்கரத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

*II.* இந்தத் துன்பியல் நிகழ்வு ஒன்றோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட பின்வரும் வழிகளில் அந்த நபரை தனது அனுபவத்தை மீளப் பார்க்க வைக்கும்:

- மூட்டும் கனவுகளாக இருக்கலாம்அந்த நிகழ்வு தொடர்பான படங்கள், சிந்தனைகள் மற்றும் பார்வைகள் மீண்டும் மீண்டும் அவர்களின் மனக்கண்ணில் தோன்றி அவர்களை துன்பப்பட வைப்புத
  – **குறிப்பு:** இளம் சிறுவர்களில், ஒரே மாதிரியான விடயங்கள் இதே போன்ற துன்பியல் சம்பவங்களை வெளிக்காட்டி மனதில் வரும்
- அந்த நிகழ்வு தொடர்பாக மீண்டும் மீண்டும் தோன்றும் கனவுகள்
  – **குறிப்பு:** குழந்தைகளில், இனம் காணமுடியாதவற்றை உள்ளடக்கிய பய
- அந்த நிகழ்வு மீண்டும் நிகழ்வது போன்ற செயற்பாடுகளைச் செய்வது அல்லது உணர்வது (அந்த அனுபவத்தை மீள அனுபவித்தல் போன்ற உணர்வு, கற்பனைகள், தொடர்பற்ற நினைவுகள்)
  – **குறிப்பு:** குழந்தைகளில், ஒரு துன்பியல் நிகழ்வு மீள நடப்பது போன்ற விடயங்கள் நடக்கலாம்
- அந்தத் துன்பியல் நிகழ்வின் ஒரு அம்சத்தைக் குறிக்கும் அல்லது அதே போன்றதைப் பிரதிபலிக்கும் உள் அல்லது வெளி அறிகுறிகளைக் காணும்போது அதிதீவிர உளவியல் பாதிப்பு ஏற்படுதல்
- அந்தத் துன்பியல் நிகழ்வின் ஒரு அம்சத்தைக் குறிக்கும் அல்லது அதே போன்றதைப் பிரதிபலிக்கும் உள் அல்லது வெளி அறிகுறிகளைக் காணும்போது அதிதீவிர உடல்ரீதியான பாதிப்பு ஏற்படுதல்

*III.* துன்பியல் நிகழ்வுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் தவிர்த்துக் கொள்ளுதல் அல்லது பொதுவான பதிற் செயற்பாடு அற்று இருத்தல் (துன்பியல் நிகழ்வுக்கு முன்னர் இருந்திராதது). அது பின்வருவனவற்றில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்கும்:

- துன்பியல் நிகழ்வுடன் தொடர்புடைய சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் உரையாடல்களைத் தவிர்க்கும் முயற்சி
- துன்பியல் நிகழ்வை மீள நினைவூட்டும் செயற்பாடுகள், இடங்கள் அல்லது ஆட்களைத் தவிர்த்துக் கொள்ளுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- துன்பியல் நிகழ்வின் முக்கிய விடயத்தை நினைவூட்ட இயலாதிருத்தல்
- முக்கிய செயற்பாடுகளில் ஆர்வமிழந்தோ அல்லது பங்கு பற்றும் விருப்பம் குறைந்தோ இருத்தல்
- மற்றவர்களிடம் இருந்து பிரிந்திருத்தல், தனிமையை விரும்புதல்
- மட்டுப்படுத்தபட்ட உணர்வுகள் ஏற்படுதல் (அன்பான உணர்வுகளை வைத்திருக்க இயலாதிருத்தல்)
- எதிர்காலம் குறைவான வருடங்களே உள்ளது போன்ற எண்ணம் (தொழில், திருமணம், குழந்தைகள் அல்லது வழமையான வாழ்க்கை முறையில் நாட்டமில்லாதிருத்தல்)

*IV.* உணர்வு மேலோங்குதல்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படுதல் (துன்பியல் நிகழ்வுக்கு முன்னர் இருந்திராதது). இது பின்வரும் விடயங்களில் இரண்டையோ அதற்கு மேற்பட்டதையோ உள்ளடக்கி இருந்தது.

- உறங்குவதற்குக் கடினப்படுவது, நித்திரையின்மை
- கோபம் அல்லது எரிச்சல் விரைவாக ஏற்படுத்தப்படுதல்
- சிந்தனைகளை ஒருங்கிணைக்க கடினப்படுதல்
- எதிலும் அதிதீவீர முன்னெச்சரிக்கை எடுத்தல்
- பதில் செயற்பாடுகள் வழமைக்கு சற்று அதிகமாக இருத்தல்

*V.* மனக்கலைவின் நேரம் (மேற் கூறிய இரண்டாவது, மூன்றாவது, மற்றும் நான்காவது அறிகுறிகள் ஒரு மாதத்துக்கு மேல் நீடிக்கும்)


*VI.* இந்த மனக்கலைவு மருத்துவ ரீதியாகக் கண்டறியக் கூடிய அளவு மன அழுத்தத்தையும் சமூக, தொழில் மற்றும் இதர முக்கிய துறைகளில் செயற்பாடற்ற தன்மையையும் கொண்டு வரும்

*VII.* தொடர்பான குறிப்பு:

- குறுகிய காலம் – நோயின் அறிகுறிகள் மூன்று மாதங்களுக்குக் குறைவாக இருத்தல்
- நீண்ட காலம் – நோயின் அறிகுறிகள் மூன்று மாதங்களுக்கு மேலாக இருத்தல்
- தாமதிக்கப்பட்ட காலம் – அறிகுறிகள் அழுத்தம் தரும் நிகழ்வு நடந்து ஆறு மாதங்களின் பின்னர் வெளிவருதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறீலங்காவின் வடகிழக்கில் நடாத்தப்படும் வான் தாக்குதல்கள் தொடர்பான ஒரு ஆய்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org